

துர்க்கா மஞ்சரி
சக்தி துணை
மலர் 2
இதழ் 3
சிறப்பிதழ்



எமது குலகுரு

சுப்பிரமுனியசுவாமிகளுக்கு இம்மலர் சமர்ப்பணம்

# துர்க்கா மஞ்சரி

*விஷு வருடம் ஐப்பசி 1ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2032 (17.10.2001)*




வெளியீட்டாளர்

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்
**7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2**
**TELEPHONE: 604.521.3472**

உ
ஓம் சக்தி



"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ,
வள்ளல் அடி இணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிற ப்பூவு மல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

இந்த ஆலயத்தில் குருக்களாக நான் இரண்டு வருடங்களுக்கு மேலாக கடமை புரிந்து வருகிறேன். இந்த அம்பாள் மிகவும் சக்கிவாயந்த தெய்வம் என்பதே எனது கருத்து. வழிதேடும் அடியார்க்கு வழிகாட்டும் இருளில் தவிப்பவர்க்கு அருள் ஒளி அளிக்கும் அறியாமைச் சேற்றில் சிக்குவோர்க்கு அறிவென்னும் ஊன்றுகோல் கொடுத்துக் கரை சேர்க்கும் துர்க்கையின் பெயருடைய மஞ்சரியின் இந்த ஆண்டின் மூன்றாவது சிறப்பு கமலமாக மலரும் துர்க்கா மஞ்சரிக்கு அருளுடன் வெற்றி இதழாக வேண்டி வாழ்த்துகிறேன்.

சுபம்

சண்முகஇரத்தின சர்மா
ஆலய குருக்கள்

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. திருமதி. கணேஷ் சுதேந்திரன்*

## சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆசியுரை

## அருள்மிகு துர்க்கை அம்மன் தேவஸ்தானம் – வன்கூவர்

சைவ மக்களுக்கு கண்கண்ட தெய்வமாகவும் கருணையுள்ள தாயாகவும் விளங்குபவள் அன்னை துர்க்கை அம்பாள். இன்று தமிழ் பேசும் சைவமக்கள் வாழுகின்ற உலக நாடுகள் எங்கணும் துர்க்கை அம்பாள் வழிபாடு பரந்து விரிந்து காணப்படுகின்றது. மேற்கு அமெரிக்கா தொடக்கம் கிழக்கே அவுஸ்திரேலியா வரை துர்க்கை அம்மன் கோயில்கள் அன்பர்களால் அமைக்கப்பட்டு வழிபாடுகளும் விழாக்களும் செம்மையாக நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சமகாலத்தில் நாம் அறிந்தவரையில் வன்கூவர் துர்க்கை அம்மன் ஆலயம் சிறப்பிடம் பெறுகிறது. இங்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை "துர்க்கா மஞ்சரி" என்ற சஞ்சிகை வெளியிடப்படுவது நாம் அறிந்த மகிழ்ச்சியான செய்தியாகும். இந்த இதழை சிறப்பிதழாக வெளியிடுவதோடு வெயீட்டு விழாவிலே தில்லை கலாயத்தினரின் நடன நிகழ்ச்சிகள் இடம் பெறுவது குறித்து மேலும் மகிழ்ச்சி அடைகிறோம்.

கடல் கடந்த நாடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மவர் தழிழ்க்கலாச்சாரத்தை வளர்ப்பதிலும் முத்தமிழை மேம்படுத்துவதிலும் அதிக ஆர்வம் காட்டுகின்றனர் என்பது வெளிப்படை.

" சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று பாடிய புதுமைக் கவி பாரதியாரின் உயர்வான எண்ணங்கள் இன்று வெளிநாடுகளில் பிரதிபலிக்கக் காண்கின்றோம். பணம் தேடுகின்ற குறுகிய நோக்கத்தை மாத்திரம் வைத்துக் கொள்ளாது கலை ஆர்வத்தை பெருக்குகின்ற கலை உணர்வு தோய்ந்த உள்ளத்தைக் கொண்ட பலர் இன்று வெளிநாடுகளில் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்குவதோடு இவர்கள் ஆற்றுகின்ற புனித சேவையும் பொலிவுற்று விளங்க வேண்டுமென்று துர்க்கை அம்பாளை பிராத்தித்து அமைகின்றேன்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
(சமாதான நீதவான்)
துர்க்கை அம்பாள் தேவஸ்தானம்
தெல்லிப்பழை - இலங்கை

இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. தியாகராஜா சிவகுமாரன்

# ஆலயமும் நாமும்

"அன்பு ஊற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட எம்முள் நடக்கும் துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே"

அன்னை பராசக்தியின் தாழ்பணிந்து எமது துர்க்கா மஞ்சரியின் இரண்டாவது மலரின் மூன்றாவது இதழை சிறப்பிதழாக தங்கள் கரங்களில் சமர்பணம் செய்வதில் பெருமையடைகிறோம். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மலரும் இம்மஞ்சரி ஆலயத்தின் செயற்திட்டங்களை மட்டுமல்ல பல அன்பர்களின் ஆன்மீக ஆக்கங்களையும் தாங்கி வருகிறது. இந்த சிறப்பிதழுக்கு தமது ஆக்கங்களை தந்துதவிய அன்பர்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம். எமது மஞ்சரிக்கு உலகின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து ஆக்கங்களை தந்து உதவியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலயம், நமது ஆன்மீக அறிவை போதிக்கும் இடமாகும். ஆலயத்திற்கு சென்று மனதார இறைவனை வணங்குவோமேயானால் எமது மனதில் என்றுமில்லாததொரு மன அமைதியேறபடுகிறது. நம்முடைய ஆணவமலம் அடங்குவதற்குரிய இடமே ஆலயம், ஆலயம் என்பது தனியே வழிபாட்டுத்தலம் மட்டுமன்றி, அங்கு கூடும் மக்களின் சமூக ஒருமைப்பாடு, பண்பாடு, பாரம்பரியங்களை பேணும் இடமாகவும் விளங்குகிறது. ஒரு ஜீவாத்மா பரமாத்மாவுடன் சங்கமம் ஆகுமிடமே ஆலயம். ஆலயதிற்கு எத்தைனையோ விதமான மக்கள் வருகிறார்கள், ஆனால் அவர்களை ஆலயத்தினுள் வந்தவுடன் பக்தர்கள் என்றே நாம் அழைக்கின்றோம், எல்லோரும் ஆலயத்திற்கு வந்தவுடன் வேண்டுவது இறைவா எனக்கு திருப்தியான வாழ்க்கையை தரவேண்டும் என்பதே. ஒவ்வொரு மனிதனிடமும் அடங்கிக்கிடக்கும் தெய்வீக ஆற்றலை வெளிப்படுத்துமிடமே ஆலயம், இங்குதான் மனிதன் பூரணத்துவமும் அடைகிறான். இங்குதான் எமது ஆசையும் ஒடுங்குகிறது.



தமிழ் மக்களுக் கென்று ஒரு வழிபாட்டுத்தலம் இந்த பிரிட்டிஸ் கொலம்பியா மாநிலத்தில் இல்லையே என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்த எமக்கு அன்னையின் ஆலயம் அமைந்தது, எமது மக்களுக்கு கிடைத்த பாக்கியம் என்றே கருதவேண்டும். இந்த ஆலயம், பொது மக்கள் ஆலயமாக மாறி இந்த ஆண்டுடன் மூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்டது. இந்த மூன்று ஆண்டுகளிலும் எமது ஆலயத்தின் வளர்ச்சியும், மக்களின் பங்களிப்பையும் பார்க்கும்போது எல்லாம் வல்ல அம்பாள் அருளினால் நாம் மிக விரைவில் கோபுரத்துடனான ஒரு ஆலயம் அமைப்போம் என்றே எண்ணத் தோன்றுகிறது. மேலும் எமது ஆலயத்தில் ஒழுங்குமுறை தவறாது பூசைகள் நடந்து கொண்டிருக்கிறது. பூசைகள் மட்டுமல்ல மக்கள் தமது விருப்பத்திற்கேற்ப அபிசேகங்களும், மற்றும் பல நேர்த்திகளையும் நிறைவேற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

துர்க்கை அம்மன் ஆலயத்தில் இதுவரை இருநூறு குடும்பங்கள் வரைக்கும் அங்கத்தவராக சேர்ந்திருக்கிறார்கள். இது வரையில் அங்கத்தவராக சேராதவர்கள் , அங்கத்தவராக சேர்ந்து துர்க்கை அம்மன் ஆலயப் பராமரிப்பு செலவுக்கு உதவுவதோடு ஆலயத்தின் வளர்ச்சியில் இயன்றவரை பங்குகொண்டு ஆலயத் திருத்தொண்டின் மூலம் அருட்கடலான அன்னை துர்க்கா தேவியன் அருள்பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். எமது அலயத்தில் பிரதி ஞாயிறு தோறும் சமய, யோக வகுப்புக்கள் நடை பெறுவது நீங்கள் யாவரும் அறிந்ததே அது மட்டுமல்ல நாம் நவராத்தி விழாவின்போது நூல்நிலையம் ஒன்றும் ஆலயத்தில் திறந்து வைத்திருக்கின்றோம் இந்நூல் நிலையத்திற்கு பல அன்பர்கள் பல விதமான ஆத்மீக நூலகளை அன்பளிப்பு செய்துள்ளனர் இது போல் நாம் பல அன்பர்களிடம் இருந்தும் தங்கள் வசதிக்கேற்ப உதவிகளை எதிர்பார்க்கிறோம்.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. ஜெயமூர்த்தி தியாகராஜா*

எமது ஆலய வருமான செலவுக் கணக்குகளை அன்பர்களும் அறிய வேண்டும் என்பதற்காக இன்னுமொரு பக்கத்தில் இந்த வருடத்திற்கான கணக்கு விபரங்களை தருகிறோம். இது ஒரு பொது ஆலயம். இது உங்கள் ஆலயம். இந்த ஆலயத்தின் வளர்ச்சி பற்றி உங்கள் எண்ணங்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டுகிறோம்.

இந்த விசேட மலரை எமது குலகுரு சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு சமர்பணம் செய்வதில் பெருமை அடைகிறோம்.

நிர்வாக சபை தொண்டர்கள்



# ஆலய பூசை நேரங்கள்

தினம் தோறும் மதியநேரப்பூசை பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

தினம் தோறும் இரவுநேரப்பூசை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இராகு காலப்பூசை பிரதி செவ்வாய் தோறும் பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

சமயபாட வகுப்பு பிரதி ஞாயிறு தோறும் பகல் 10.00 மணியில் இருந்து 11.30 மணிவரைக்கும் நடைபெறும்.

யோக வகுப்பு பிரதி ஞாயிறு தோறும் பகல் 11.300 மணியில் இருந்து 12.00 மணிவரைக்கும் நடைபெறும்.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. ஜெயகுமார் தியாகராஜா*

ARUL MIGU THURKADEVI HINDU SOCIETY OF BC
STATEMENT OF RECEIPTS AND PAYMENTS
FOR THE PERIOD FROM JANUARY 31, 2001 TO SEPTEMBER 30, 2001

| | | 2001 |
|---|---|---|
| RECEIPTS | | |
| | POOJA CONTRIBUTION | 33,652.00 |
| | UNDIAL DONATION | 2,841.00 |
| | ARCHANAI OFFERINGS | 13,870.00 |
| | MEMBERSHIP CONTRIBUTION | 10,710.00 |
| | DONATION GENERAL FUND | 8,635.00 |
| | PROJECT ADVANCE BLOCK DONATION | 4,000.00 |
| | MANAWARAI RENTAL | 1,400.00 |
| | WEDDING INCOME | 5,388.00 |
| | INTEREST INCOME | 22.00 |
| | TOTAL | 80,518.00 |
| PAYMENTS | | |
| | COST OF POOJA | 2,640.00 |
| | KITCHEN SUPPLIES,PRASATHAM | 8,119.00 |
| | COST OF SERVICE PRIEST | 6,733.00 |
| | MANJARI PRINTING | 154.00 |
| | CITY OF BURNABY WATER SEWAGE BILLING | 461.00 |
| | PRINTING 2001 CALENDAR | 838.00 |
| | SECURITY FIRE ALARM SYSTEM | 223.00 |
| | BANK CHARGES | 77.00 |
| | MORTGAGE PAYMENTS -VANCITY | 21,204.00 |
| | PROPERTY TAX CITY OF BURNABY | 3,039.00 |
| | BUILDING INSURANCE VANCITY AUG.01 TO AUG.02 | 1,701.00 |
| | REPAIRS & MAINTENANCE | 5,194.00 |
| | PURCHASED GAS COOKER HEAVY DUTY | 490.00 |
| | INSTALLED EXHAUST SYSTEM & MOTOR | 3,354.00 |
| | GARBAGE REMOVAL | 690.00 |
| | PEST CONTROL | 60.00 |
| | LEGAL FEES ON 50,000 LOAN | 640.00 |
| | BC.HYDRO | 3,754.00 |
| | TELEPHONE | 343.00 |
| | TOTAL | 59,714.00 |
| EXCESS OF RECEIPTS OVER PAYMENTS | | 20,804.00 |

PLEASE NOTE THIS EXCESS RECEIPTS WERE USED TO REDUCE THE LOANS BY $ 18,000.00

# President's Report

May God bless us all
May the Divine Mother's grace be upon us all

On September 12, 2001 came the second anniversary of the Durga Temple at the present sacred place. Temple is a place of worship. Most of us experience the tranquil feeling - serenity as we enter the prayer hall; some kind of indescribable beauty and reverence surrounds in that setting, especially during the Pooja times.

There are scientific and experimental proofs that prayer actually works. Power of prayer is stressed in every Religion - also in Charlatan and Black Magic! Prayer seems to be an intuitive reaction for anyone faced with danger or serious illness or pain. Crying out loud to a higher being for help and healing is natural; thus it was practiced even in the most primitive societies. We are blessed with lot of (innumerable) things in life - the life itself! We should be grateful for what we are. When properly practiced, prayer and meditation gives inner peace and strength to handle any problem that comes on our way. I might personally vouch for this fact. Life is not Bed of Roses. Almost all of us have experienced testing times - struggles and torments. Prayer helps to understand that these experiences are there not to destroy us but to transform us to become a better person than before the event. Through prayer we communicate with God and seek salvation, Mukthi, Mortsham - that is aligning and uniting our little " Self " with the Source from which it originated.

At these technological times, easiest way to worship is to follow the ritualistic and meditative methods that were defined by our Saiva Siththantha Kurumars and practiced by our elders. I gladly point out here that with the support of the members and the temple priest and the advisors, the committee and board of directors are doing their best to achieve this goal. In making every decision, the Board always keeps in mind that this is a long term establishment that has to be passed on to the future generations.

During the latter part of 1998, devotees of our Divine Mother Durga, were desperately in need of a place to worship. Our prayer was answered: Her Grace has doubly blessed us. We were not only able to find a centrally located hall in the Greater Vancouver Region but also the facility was used for the purpose of worship and worship only for more than 14 years by the previously owned society. Thus the sacredness of the ground and the buildings have been preserved, well before in time, for us.

I need not elaborate on the achievements of the AMT Society within these few years. In short I am pleased to say that it is remarkable and I am sure by the Divine Grace Will, we all will continue to perform the service to our fullest capacity.

On behalf of the Board of Directors and the Committees, I acknowledge with gratitude;
the sincerity of all the devotees of Durga Devi,
the commitment of all the members of the AMT Society,
the dedication of The Temple Priest,
the services ( assistance ) of all Volunteers,
the coordination of all the Sub Committees,
the cooperation of all the Directors, and
the patience of all the Advisors.

Finally, again, I like to stress the importance of Worship. Study after study has proved that even few minutes of workout few times a week ( walking, jogging, swimming, yoga, etc..etc..) makes a huge difference in healthy living. Likewise, few minutes of Worship few times a week will definitely make a huge difference in conscious living ( Spirituality of the Self ). Therefore I urge all the parents to make the children go frequently to the Temple not by force but by their own accord.

May the Divine Mothers Grace be upon all of us.
May God Bless us All.

# செயலாளரின் அறிக்கை

அரிது அரிது மானிடராதல் அரிது. "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என அப்பர் அடிகள் மனிதப் பிறவியை மதித்திட வேண்டும் என்பார். மானுடப் பிறவி எடுக்கும் போது நாம் நம் நிலையை உணர்ந்து அறம் தொடர்பான பணியில் ஈடுபட்டு புண்ணியத்தைச் சேர்க்க வேண்டும். வாழ்க்கை என்னும் பயணத்தில் ஆன்மாவேடு கூட வருவது உடல். பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் நம் உடலைப் பெற்றதின் நோக்கத்தை பூர்த்தி செய்ய வேண்டும். நமது பதினெட்டு புராணங்களும் "பிறருக்கு சேவை செய் எவருக்கும் கெடுதல் செய்யாதே" என்ற தத்துவத்தைத் தான் எடுத்துச் சொல்லுகின்றன. ஆகவே உடலைப் பெறறதன் பயனாக நமது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்க வேண்டும். தவத்தாலும் தீர்த்த யாத்திரைகளாலும் மட்டும் ஆன்ம விடுதலை ஏற்படுவதில்லை. பிறருக்குச் செய்யும் தன்னலமற்ற சேவையே ஆன்ம விடுதலையை நல்கவல்லது. பூமியில் பிறந்த அனைவருக்கும் இறைவனால் பெரும் பணியும் பல பொறுப்புகளும் தரப்பட்டுள்ளன. அவற்றை நிறைவேற்ற வேண்டியது நமது கடமை. நான் என்னும் அகந்தையை விட்டு அன்பு உ ணர்வோடும் விருப்பத்தோடும் பணிகளைச் செய்ய வேண்டும். "பணிவோடு இருக்கத் தெரியாதவன் கட்டளையிடத் தகுதியற்றவன்" என பெரியோர்கள் கூறி இருக்கிறார்கள். எனவே தன்னலமற்ற தொண்டனாக செயலாற்றாமல் ஒருவன் சிறந்த தலைவனாக முடியாது.

ஊழல், இலஞ்சம், வன்முறை, போலிக்கட்டு, அறியாமை இவைகள் தற்சமயம் நாட்டில் தலைவிரித்தாடி தாண்டவம் செய்யும் பொழுது இளைய சமுதாயத்திற்கு உகந்த குணங்களான கருணை, தயை, அடக்கம், அன்பு, வாய்மை, தூய்மை, தைரியம், மனித நேயம், பெருமை, நேர்மை இவைகளை எடுத்துச் சொல்லி வாழ்ந்து காட்டுவது நம் கடமை. நம் இளைய சமுதாயம் நன்கு கல்வி பயின்று அறிவு வளர்ச்சியில் பூரண ஈடுபாடு கொண்டு அவர்களிடம் உயர் எண்ணங்களை வளர்த்து கலையிலும் கைதேர்ந்து பண்பாளர்களாகவும் பேரறிஞர்களாகவும் ஆகி சாதனைகள் பல பரிந்து வாழ்க்கை வளம் பெற நாம் வழிகாட்டிகளாக வாழ்ந்து காட்ட வேண்டும்.

இவைகளைச் செய்ய நமக்குத் தேவை இறைவனின் கருணை. கடவுள் தாய் வடிவம். அந்தத் தாய் நாம் எதைக் கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறாள் என்பதை என் அனுபவத்தில் நான் புரிந்து கொண்டுள்ளேன். பலவற்றை எனக்கு சாதித்து தந்திருக்கிறாள். புரிந்தவர்களுக்கு அவள் ஒரு கற்பகத்தரு. புரியாதவர்களுக்கு அவள் ஒரு புதிர். தாயை நோக்கி நாம் ஓரடி எடுத்து வைத்தால் அவள் பத்தடி பாய்ந்து வருவாள். பிரபஞ்சத்தில் உள்ள லோகங்கள் அனைத்திற்கும் அன்னை ஜகன் மாதாவாக இருக்கிற படியால் அவளுடைய குழந்தைகள் நாம் அவளை எப்படி உபாசித்தாலும் அதை ஏற்றுக்கொண்டு அனுக்கிரகம் செய்வாள். உள்ளன்போடும் உண்மை யான பக்தியோடும் உபாசிக்க வேண்டும். சரணாகதி அடைந்தால் அகிலாண்டலேஸ்வரி நம்மை ரட்சிப்பாள் தினமும் "நல்ல எண்ணமும் தூய உள்ளமும் கொடு தாயே. ஈடில்லா இவ்வுலகில் உன் திருவடிகளை மறக்காலாகா வண்ணம் அருள் புரிவாய் தாயே. எல்லா உயிர்களும் நலமுடன் வாழ அருள் புரிவாய் நீயே" என்று வேண்டிக்கொண்டால் துர்க்கா தேவியின் அருள் கிடைக்கும்.

அம்பாளுக்கு தொண்டு செய்யக் கிடைத்தது மாபெரும் பாக்கியம். என்னுடைய பணியைச் சிறப்பாகச் செய்ய உதவிய தொண்டர்கள், அடியார்கள், நண்பர்கள், யாவருக்கும் எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. பு. கருணாகரன்

# கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி, அறநெறி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

1925: 7-1-1925 புதன்கிழமை இரவு 9.30 மணி மிருகசீடம் இடபராசியில் அவதரித்தார்
1929: மல்லாகம் அமெரிக்க மிசன் பாடசாலையில் பாலர்வகுப்பில் சேரல்
1940: S.S.C பரீட்சையில் சித்தி, பிரவேச பண்டித பரீட்சை சித்தி
1941: சுன்னாகம் இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சிக்குச் சேரல்
1944: பயிற்ச்சிக் கலாசாலை இறுதிப் பரீட்சையில் மொத்தம் 13 பாடங்களில் சித்தியடைந்து வெளியேறல்
1946: மட்டக்களப்பு சென்ற் சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராக நியமனம்
1952: பால பண்டிதர் பரீட்சையில் சித்தி
1958: தாயார் மறைவு, சென்னை சைவசித்தாந்த சமாஜம் நடாத்திய சைவ புலவர் பரீட்சையில் சித்தி
1960: தந்தையார் மறைவு
1961: தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் திருப்பணிச்சபை அங்கத்தவராகச் சேரல்
1965: தமிழ்நாடு சிதம்பரத்திலும், அண்ணாமலைப் பழ்கலைக்கழகத்திலும் உரையாற்றல்
1966: மதுரை ஆதீனத்தால் " செஞ்சொற் செம்மணி " என்ற பட்டம் வழங்கப்பட்டது. துர்க்கா தேவி ஆலயப் பொறுலாளராகப் பதவி ஏற்றல்
1970 ஈழத்துச்சிதம்பரத்தில் " சிவத்தமிழ்ச் செல்வி " என்ற பட்டமும் பொன்னாடை பதக்கமும் பெறல்
1971: மலேசியா, சிங்கப்பூருக்குச் சொற்பொழிவுப் பயணம். அங்கு "திருவாசகக் கொன்றல்" என்ற பட்டம் பெறல்
1973: தென்னிந்திய திருவிடை மருதூரில் நடைபெற்ற திருமறைக் கருத்தரங்குக்குத் தலைமை தாங்குதல் அகில இலங்கை இந்து மாமன்றம் கொழும்பில் சிவஞான வித்தகர் என்ற பட்டம் வழங்கியமை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் " துர்க்கா துரந்தரி " என்ற பட்டம் வழங்கியமை
1977: துர்க்காதேவி தேவஸ்தானம் நிர்வாகசபைத் தலைவர் பதவி ஏற்றல்.. 20-01-97 சித்தரத்தேர் திருப்பணி வேலை ஆரம்பித்தல்
1978: கந்தபுராணச் சொற்பொழிவு நூலுக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தல், முதல் முதலாக அம்பாள் சித்திரத்தேரில் வலம் வருதல்
1980: தமிழ் நாடு ஆரணியில் மங்கையர் மகாநாட்டிற்குத் தலைமைதாங்குதல்
1982: " துர்க்கா புஷ்கரணி " தீர்த்தக்குளம் பிரதிஸ்டை. சைவப் பெண் குழந்தைகளுக்கு இல்லம் அமைத்தல் காசி யாத்திரை ரிஷிகேச யாத்திரை செய்தல் " சமாதன நீதவான் என்ற பதவிக்குரிய சத்தியப்பிரமானம் செய்தல்
1985: மணிவிழா நிகழ்வு இடம்பெறல். " சிவத்தமிழ் இன்பம்", "சிவத்தமிழ் செல்வம்", "சிவத்தமிழ் ஆராய்சிக்கட்டுரை" ஆகிய மூன்று நூல்களும் வெளியிட்டமை
1986: " துர்க்காபுரம் மகளிர் இல்லம்" இரண்டு மாடிக்கட்டிடத் திறப்பு விழா நடைபெற்றமை
1987: இலண்டன் பயணம் சென்று சொற்பொழிவுகள் ஆற்றி " இலண்டணில் ஏழு வாரம்" நூல் வெளியீடு செய்தமை
1990: சிவதமிழ் செல்வி பிறந்தநாள் அறநிதியம் ஆரம்பம். ஸ்ரீலலிதா சகஸ்ரநாம நூல் வெளிட்டமை

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. விக்கிரமசிங்கம் தியாகராஜா*

1991: " கலாசூரி" என்ற பட்டத்தை அரசு வழங்கியமை. " சைவக்கிரியைகளும் விரதங்களும்" நூல் வெளியிட்டமை. நிர்வாகசபை வெள்ளி விழா மூன்று நாட்கள் நடைபெற்றமை

1992: யுத்த அனர்த்தம் காரணமாக மகளிர் இல்லப்பிள்ளைகளோடு மருதனா மடம் இராமனாதன் கல்லூரியில் இடம் பெயர்ந்து தங்கியமை

1998: யாழ் பல்கலைகழகத்தினால் " கலாநிதிப்" பட்டம் வழங்கப்பெற்றமை

1999: கனடா சைவ சித்தாந்த மன்றக் காப்பாளரில் ஒருவராகவும் " அன்புநெறி"' சிறப்பாசிரியரில் ஒருவராகவும் கடமை ஆற்றியமை " துவிஞோத்தமி" என்ற பட்டம் வழங்கியமை.

1999: கனடா வன்கூவர் அருள் மிகு துர்க்கா தேவி இந்து தேவஸ்தானத்தில் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் ஆசியுடன் " அறநெறி அன்னை " என்றபட்டமளித்து கௌரவிக்கப்பட்டமை.

2000: பவளவிழாவை முன்னிட்டு " சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம்" திறந்தமை.



*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திருமதி. தனலக்ஷ்சுமி தியாகராஜா*

# மகாப் பிரதோச மகிமை
# காமகோடி பெரியவாள் அருளும்
# பிரதோச தத்துவம்

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதீ சுவாமிகள் பிரதோசத்தின் தத்துவத்தைப் பற்றி மிக அற்புதமாக நமக்கு அருளுகின்றார்.



பிரதோச காலம் பரமேஸ்வரனை தியானம் செய்வாற்கு தகுந்தகாலமாகும். அதாவது ஈஸ்வரனை தன்வசப்படுத்திக் கொள்ளும் மிகவும் விசேசமாகும்.உலகம் ஒடுங்குகிறது மனதும் ஈஸ்வரனிடத்து ஒடுங்க அதுவே நல்ல நேரம் பகலின் முடிவு, சந்நியா காலத்தின் ஆரம்பம், சிருஷ்டி பெற்று தன் ஸ்வரூபத்தில் அடங்கிக் கொள்ளும் நேரம்.

பிரதோஷ காலத்தில் ஈஸ்வரன் எல்லாவற்றையும் தன்னிடம் அடக்கிக் கொள்வதால் வேறொரு வஸ்த்து இல்லாத நேரமாக அமையும்.

உதயத்தில் சிருஷ்டியும் பிரதோஷ காலத்தில் சம்ஹாரமும் நடக்கின்றன. இராத்திரி ஆரம்பத்தைத்தான் சம்ஹாரம் என்கிறோம். அதனால்தான் இரவு நித்திய பிரளய காலமாக இருப்பதாக கூறப்படுகிறது. நித்திய சிருஷ்டியும் நித்திய பிரளயமும் நடக்கின்றன. பட்சிகள் மாடுகள் முதற்கொண்டு ஒதுங்கிக் கொள்ளுகின்றன. குழந்தைகள் கூட தம் விளையாட்டை முடித்துக்கொண்டு வீட்டுக்குள் ஒதுங்கிக் கொள்ளுகின்றனர்.

அந்தக் காலம்தான் சித்தத்தை ஏகாந்தமாக லயிப்பதற்குத் தகுந்த காலம். ஒருவராக இருந்து நித்திய பிரளய நேரத்தில் நடராஜர் நடனம் செய்கின்றார். எல்லாம் அதில் லயித்து விடுகின்றது.

அப்போது சஞ்சாரம் செய்யும் பூதப்பிசாசுகள் கூட அந்த நர்த்தனத்தில் லயித்து யாருக்கும் உபத்திரத்தை கொடுக்கமாட்டாது. அது கண்கட்டு வித்தை போல் நடக்கிறது. கூத்தாடி யாருடைய கண்களையும் கட்டுவதில்லை ஆனால் பார்த்துக் கொண்டிருக்கும் போதே நம் மனசையும் கண்களையும் வேறொன்றில் ஆகர்ஷித்துவிட்டுத் தான் நினைத்ததைச் செய்து விடுகிறான்.

உசஷக் காலத்தில் ஹரி ஸ்மரணையும், சாயங்காலத்தில் சிவநாம ஸ்மரனையும் உகந்தவை, நடராஜ மூர்த்தியின் நாமாவை உச்சாரணம் செய்வதற்கு பிரதோச வேளைதான் முக்கியம்.

இப்படிச் சிவனை வழிபடுபதற்குத்தான் கோவில்களைக் கட்டினார்கள். சிவ பஜனை செய்வதற்கு எல்லோருக்கும் அவர்கள் வீட்டில் வசதியிருக்காது. அதற்காகத்தான் பெரும் கோவில்களைக் கட்டினார்கள். ப்ரதோஷ வேளையில் பரமேஸ்வரன் உலகசக்தி முழுவதையும் தன் வசம் ஒடுக்கிக் கொண்டு நாத்தனம் செய்யும் வேளையில் நாம் ஈஸ்வரனையே வழிபடவேண்டும்.

சகல லோகத்தையும் காத்தருளும் கருணாமூர்த்தியான கயிலைமலை வாசனுக்கு உகந்த இப்பிரதோஷ கால மகிமையை பற்றி நமது கண்கண்ட தெய்வம் நடமாடும் கருணைக்கடவுள் ஆசார்ய சுவாமிகள் அருளிய அமுதவாக்கு அனைவருக்கும் சுபிட்சத்தையும் செல்வத்தையும் காரியசித்தியையும் தரத் தக்க பக்தி மார்க்கமாகும்.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. தர்மலிங்கம் கேதீஸ்வரநாதன்*

# வளரட்டும் "துர்க்கா மஞ்சரி"

ஆறு பக்கங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட "துர்க்கா மஞ்சரி" இன்று வளர்ச்சி பெற்று புத்தக உருவில் வெளிவரும் செய்தி அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சின்னதாக ஆரம்பிக்கப்பட்ட துர்காதேவி ஆலயம் இன்று பெரிய விருட்சமாக மாறி பல்லாயிரக்கணக்கான பக்தாகளுக்கு அருள்பாலிக்கும் ஆலயமாக வளர்ந்து பெருமை தருவதற்கு பக்தர்கள், ஆலயத் தொண்டர்கள் ஆகியவர்களது அளப்பரிய உழைப்பு மட்டுமன்றி "துர்க்கா மஞ்சரியும்" ஒரு காரணமாகும்.

ஆரம்பத்தில் இருந்தே ஆலயத் தொண்டர் சபை ஆலய வளர்ச்சிக்கும், பக்தர்களது சௌகரியத்திற்கும் ஒரு செய்தி வெளியீடு ஆலயத்தில் இருந்து வெளிவரவேண்டும் என்பதை தீர்க்கதரிசனத்துடன் தீர்மானித்தது. இந்த வெளியீட்டில் ஆலயத்தின் விரத, பூசை, விபரங்கள் மட்டுமன்றி ஆலய வளர்ச்சிக்கு தொண்டர் சபை என்ன செய்கிறது என்ற விபரங்களையும் உள்ள அடக்கியதாக அமைய வேண்டும் என்றும் விரும்பியது.

ஆலயத்தின் வளர்ச்சியில் பக்தர்கள் விசுவாசத்துடன் பங்குபற்ற உத்தியோக பூர்வமான செய்திகள் பக்தர்களுக்குச் சென்றடைய இந்த வெளியீடு பயன்பட வேண்டும் என்றும் விரும்பியது.

பக்தர்கள் எல்லோரும் ஆலயத்திற்கு வாருங்கள் இது உங்கள் ஆலயம், உங்கள் வீடு, ஆலயத்திற்கு வந்து எல்லாத் தொண்டுகளிலும் பங்கு பற்றுங்கள் என்று இரு கரம் கொண்டு அழைக்கவும் இந்த வெளியீடு உதவியாக இருக்கும் என்றும் நிர்வாக தொண்டர் சபை தீர்மானித்தது.

இந்த வெளியீட்டுக்கு "துர்க்கா மஞ்சரி" என்றும் பெயர் சூட்டப்பட்டது. அவர்கள் அன்று நினைத்தது தீர்க்க தரிசனம் பொய்க்கவில்லை. ஆலயம் அன்றாடம் பக்தாகள் நிரம்பி வழிகின்ற செய்தியை காதாரக் கேட்டு மிகவும் உவகை அடைகிறேன்.



"குமுதம்" சஞ்சிகையில் இடம் பெறும் அளவிற்கு ஆலயத்தின் செயற்பாடுகள் உலகப் பிரசித்தமாகிவிட்டது.

ஒரு ஆலயம் எப்படி இருக்க வேண்டும் அது என்ன விதமான சேவைகளை அதன் பக்தர்களுக்குத் தர வேண்டும் என்பதற்கு வட அமெரிக்காவில் ஒரு முன் உதாரணம் துர்க்கா தேவி ஆலயம்.

துர்க்கா தேவி ஆலயமும், துர்க்கா மஞ்சரியும் மேலும் மேலும் வளர்ச்சிப் பாதையில் முன்னேற வேண்டுமென எல்லாம் வல்ல துர்க்கா தேவியை வேண்டி நிற்கிறேன்.

ஓம் துர்க்கா தேவி சரணம்

மு. கதிர்காமநாதன்
( ரொரன்டோ)

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. துரைசாமி சிவயோகம்பிள்ளை*

# கலையும் மதமும்



ஈழத்தமிழ் மக்கள் உலகின் எட்டுத்திசைகளிலும் பரந்து வாழும் இன்றைய நிலையில் மகாகவி பாரதியார் உலகில் எட்டுத்திசை எங்கும் தமிழ்மொழி முழங்கச்செய்வோம் என்று பாடியது என் நினைவுக்கு வருகிறது. இதனை எமது ஈழத்தமிழர் நிறைவேற்றி வருவதுடன் மேலும் ஒருபடி மேலாக எமது கலாச்சாரம் இந்துமதம் ஆகியவற்றையும் பரப்பிவருகிறார்கள் என்பதில் நாம் பெருமைப்படுகிறோம். கலை கலாச்சாரம் மதம் ஆகிய மூன்றும் பின்னிப்பிணைந்துள்ளன. தில்லைநடராஜனின் நடனத்தை பரதநாட்டியத்தில் நாம் காண்கிறோம். ஓர் சிற்பியின் கைவண்ணத்திலே மலர்ந்த வழிபாட்டுக்கான விக்கிரகத்தில் கலையின் சிறப்பைக் காண்கிறோம். எனவே கலையிலே கலாச்சாரத்தை காண்கிறோம். கலாச்சாரத்தையும் கலையையும் மதத்திலே காண்கிறோம். கலை என்னும் சொல்லுக்கு பல்வேறு பொருள் உண்டு.

நாம் காணும் எல்லாவித்தைகளுமே கலைகளாகும். நான்கு வேதங்கள் வேதங்களின் அங்கங்கள் சாஸ்திரங்கள் ஆகியன எல்லாம் கலைகளே.

இவற்றிலும் மொழியோடு இணைந்து வழங்கும் இயல் இசை நாடகம் என்பவையே தனிச்சிறப்புடையனவாக இருக்கின்றன. விலங்கினத்தையும் மனிதனையும் வேறுபடுத்துவது மொழி. அது போன்றே மனிதருள்ளும் ஒப்புயர்வற்றவனாக ஒருவனை எடுத்துக்காட்டவல்லது கலை,. கலை தன்னிச்சை வழிபுகும் மனித மனத்தை தடுத்து நிறுத்தி ஒருவழி செலுத்தும் சிறப்புவாய்ந்ததாக திகழ்கிறது. இத்தகையநிலையில் இறைவனை அடையவழிவகுக்கிறது.

கலை அமைதியற்ற உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்கிறது. உளத்தூய்மை செயற்றூய்மை ஆகியவற்றை உண்டாக்கி மனிதனிடம் இயற்கையாக அடைந்துகிடக்கும் அழுக்காறுகளை போக்குவதுடன் அவனை பண்புடையவனாகவும் சமூகத் தொண்டனாகவும் மாற்றியமைக்கிறது. ஒரு கலைஞன் சுயதேவைகளையும் தன்னலத்தையும் துறப்பதோடு தன்னையே மறக்கிறான்.

இத்தகைய தன்னை மறந்தநிலை பார்ப்பவர்களுக்கு பைத்தியம்போல் தோன்றினாலும் அவனை உண்மையாக இறைவனோடு ஒன்றச் செய்கிறது.

நாம் கலையையும் மதத்தையும் ஒப்புநோக்குங்கால் இரண்டுக்கும் பிரிக்கமுடியாத அளவிற்கு ஒப்புமை இருப்பதைக் காணலாம். கலையைப் போன்றே மதமும் மனிதனை இறைவனாக்குகின்றது. மதம் எனும் சொல் பலபொருள்படுமாயின் சிறப்பாக வழி, ஒழுங்கு, என்னும் பொருளாய் அமைதல் நோக்குதற்குரியது. பாதைகள்-அதாவது வழிகள் அனைத்தும் போக்குவரத்துக்காகவே செப்பனிடப்பட்டிருக்கின்றன.

வாழ்வு என்னும் பாதைவழியாக மரணம் என்னும் நிலை அடையும்வரை கேந்திரஸ்தானத்தை நோக்கி மக்கள் அடியெடுத்து வைத்துக்கொண்டேயிருக்கிறார்கள்.இப்பிரயாணம் கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது.

பலர் பிரயாணம் முடித்துக்கொண்டார்கள். பலர் பிரயாணத்தை ஆரம்பிக்க இருக்கிறார்கள். மதங்கள் அதாவது நான் முன் கூறிய இந்த வழிகள் குறைவு நிறைவுகளை உடையனவாக மேடுபள்ளங்களை உடையனவாக அமைந்திருந்தபொழுதிலும் யார் யார் எம்மதத்தை பற்றிச் செல்கின்றனரோ அவரவர் தம் பிரயாணத்தை வெற்றியோடு முடித்துக்கொள்கின்றனர். இதுபோன்றே பரமாத்மாவாகிய இறைவனை ஜீவாத்மாவாகிய உயிர்கள் சென்றடைவதற்கென பலவகைக்கட்டுப்பாடுகளையும் வரையறைகளையும் கோட்பாடுகளையும் உடைய பலமதங்கள் வகுக்கப்பட்டபொழுதிலும் அம்மதங்கள் அனைத்தும் உயிர்களை இறைவன்பால்இட்டுச்செல்லும் என்பதில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். கலைகளை 64ஆக வகுத்த தமிழ்மக்கள் அவற்றிற்குரியவளாக கலைவாணியை தலைவியாக்கி வழிபடுவதிலிருந்து

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. மகேந்திரன் இராதாகிறிஷ்ணன்*

கலைக்கும் மதத்திற்கும் உள்ள தொடர்பு தெளிவுபடுகின்றது. இன்னமும் தமிழரது வாழ்க்கையிலே கலையும் மதமும் பெற்றிருந்த நிலையைப் பல்லவர் சோழகால தமிழ்நாட்டு வரலாறு சான்றுபகருகிறது. பழந்தமிழ் நாட்டின் பண்பாட்டுச் சிறப்புகளில் பண்புடைய மூவேந்தர் பரம்பரையும் அவர்களால் வளர்க்கப்பட்ட மதமும் மதத்தோடு தொடர்புடையனவாக வடித்தெடுக்கப்பட்ட சிற்பங்களும், கலைதான் மதம், மதம்தான் கலைஎன்னும் உண்மையை வலியுறுத்துகின்றன.

பல்லவர் சோழகாலத்தில் உண்டான சைவசமயத்தின் வளர்ச்சி கலையுலகிலேயே ஓர் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்திவிட்டதென்று கூறிவிடலாம். அத்தோடு அக்காலத்தில் உண்டான கலைவளர்ச்சி சைவசமயத்தின் எழுச்சியையும் பெருமையையும் எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. மாமல்லபுரத்தில் வியக்கும்விதத்தில் செதுக்கப்பட்டுள்ள வடிவங்களும் சிற்பங்களும் ஆங்காங்கு காணப்படும் சிறந்த கலையம்சங்களும் மக்கள் வாழ்க்கையில் மதமும் கலையும் எவ்வளவு தூரம் ஒன்றுக்கொன்று பாகுபாடின்றி போற்றப்பட்டன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

உருவவழிபாடு கலையோடு இணைந்திருக்கிறது என்பது சொல்லாமலே விளங்கவேண்டியதாகும். பகுத்தறிவுள்ள மனிதன் ஓர் உருவத்தைப் பார்த்து அது கடவுளின் வடிவம் என்பதை திடமாக ஏற்றுக்கொண்டானேயானால் அவ் வடிவத்தை இறைவனாகவே கண்டமைக்குக் காரணம் அவ் வடிவத்திலே அமைந்துள்ள சிறந்த கலையம்சம் என்றே கூறவேண்டும். இந்த ஒருமைப்பாட்டிலேதான் மதமும் கலையும் ஒன்று என்ற கோட்பாடு உரமூட்டப்படுகிறது. கலைஞன் கற்பனையிலே கண்ட கடவுள் வடிவத்தை சமயக்குரவரான திருநாவுக்கரசர் தம் முன்னே கண்டார். கண்டதும் மெய்மறந்தார். இறைவனுடைய ஒவ்வொரு அம்சத்தையும் உற்று நோக்கினார். தன் கண்களைக் கூட அவரால் நம்பமுடியவில்லை.கண்ணோடு கண்ணினை நோக்கினார். இறைவனுடைய வளைந்த புருவம் தன் நிலையை உணர்த்தியது. கொவ்வைப்பழத்தை நிகர்த்த திருவாயை நோக்கினார்.கொவ்வை இதழ்களினின்றும் முகிழ்ந்தகுமிண் சிரிப்பை அவரால் மறக்கமுடியவில்லை.கண்ணை ஒருமுறை இமைத்தார். இறைவனது திருச்சடையிலே இருந்த வித்தகர் போற்றிடும் கங்கை தென்பட்டது. பார்வை அத்தோடு நிற்கவில்லை. சிவந்த மேனியிலே படிந்திருந்த வெண்ணீறு கண்ணை மறைத்தது. பிரதிபலித்த ஒளியை பார்க்கமுடியாது திருக்கமலப்பாதங்களை நோக்கினார். அங்கே திருப்பாதம் உயர்ந்திருப்பதைக் கண்டார். அவ்வளவுதான் தன்னை மறந்தார். மனிதப்பிறவியின் மாண்பினை உணர்ந்தார். நரை,திரை, மூப்புச்சாக்காடு ஆகியவற்றினின்றும் நீங்கிய தேவர்களின் பிறப்பினும் மனிதப்பிறவி பெருமைவாய்ந்தது என்னும் முடிவுக்கு வந்தார். கலைஞன் கற்பனையில் கண்ட அதே உருவோடு இறைவனைக் கண்ட சுவாமிகள் குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயிற் குமிண்சிரிப்பும் பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும் இனித்தமுடனே எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே
என்று ஒரு காவியத்தையே வடித்துவிட்டார்.

சுபம்



எஸ். புண்ணியமூர்த்தி
(ஓய்வுபெற்ற செய்திப் பொறுப்பாளர்)
(இலங்கை வானொலி ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்)

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. ரவிச்சந்திரன் பொன்னம்பலம்*

# சுவடுகள்

1.வீபூதியின் தத்துவம் யாது?

வீபூதி என்பதற்கு சிறந்த ஐசவர்யம் என்பது பொருள். சிவானந்தமே சிறந்த ஐசவர்யம். பசுமாட்டின் சாணத்தை எரித்து உண்டாக்குவது திருநீறு. ஆன்மாக்களின் மலத்தை ஞானம் எனும் அக்கினியில் எரித்துச் சிவானந்தத்தை அடையும் நிலையையே திருநீறு காட்டுகிறது.

2.இலங்கையில் எந்த தமிழ் அரசன் கோயில் கட்டினான்? அக்கோயிலின் பெயர் என்ன?

இராசராசன். இலங்கை மாந்தோட்டத்தில் இராசராசேஸ்வரம் அமையப் பெற்றுள்ளது.

3.சூடம் ஏற்றுவது எதைக் குறிக்கிறது?

ஆன்மா பரமாத்மாவோடு கலப்பதைக் குறிக்கும். சூடம் வெண்மையானது. அது சுத்த சத்துவ குணமுள்ள ஆன்மாவைக் குறிக்கும்.சூடத்தை ஏற்றியவுடன் அது தீபம்போல எரிவது ஞானாக்கினியால் மலம் நீங்கப் பெற்ற ஆன்மாவானது சிவகரணம் பெற்று நிற்பதைக் காட்டும்.சூடம் இறுதியில் ஒன்றுமில்லாது கரைந்து போவது போல ஆன்மாவானது சரீரங்களையெல்லாம் நீங்கி இறைவனோடு ஒன்றுபடும். இதை விளக்குவதே சூடம் ஏற்றுதலின் தத்துவமாகும்.

4.சிவனின் வாகனமான காளையின் சிறப்பு யாது?

தர்மதேவதை என்கிற ரிசபம் தர்மத்தை வெளிப்படுத்துகிறது.

5.அர்த்த நாதீசுவரனின் தத்துவம் என்ன?

ஆண்டவனுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று வெப்பம். மற்றொன்று குளிர்ச்சி. வெப்பம்-சிவப்பாயிருக்கும். அது சிவபெருமானின் பவளமேனி. குளிர்ச்சி பச்சையாக இருக்கும். அது பார்வதியின் மரகதமேனி.

6. கும்பாபிசேகத்தின் பலன் என்ன?

பன்னிரண்டு ஆண்டுகள் கோயிலுக்குச் சென்ற புண்ணியம் ஒரு கும்பாபிசேகம் தரிசிப்பதில் கிடைக்கும்.

7. ஒரே கல்லின் செதுக்கப்பட்ட நந்தி எங்கே உள்ளது?

தஞ்சைப் பெரிய கோயிலில் இருக்கிறது.



8. எந்தக் கடவுளுக்கு எந்த இலை அர்ச்சனைக்கு ஏற்றது?

சிவனுக்கு - வில்வஇலை!
பெருமாளுக்கு- துளசி
பிரம்மாவுக்கு- வன்னி இலை
ஓம் சக்திக்கு - வேப்பிலை
கங்காதேவிக்கு-மாவிலை

9. மீன்களே இல்லாத திருக்குளம் எது?

மதுரை பொற்றாமரைக் கோயில் குளத்தில் மீன்களே கிடையாது.

10. அதிக கோபுரங்கள் கொண்ட கோயில் எது?

மதுரை மீனாட்சியம்மன் கோயில்தான். அதில் 14 கோபுரங்கள் இருக்கின்றன.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. செல்லத்துரை சுப்ரமணியம்*

11. தக்கன் யாகம் செய்த இடம் எது?

இமயமலையைச் சார்ந்த கனகலம்.

12 ஒவ்வொரு ஆண்டும் சித்திரைமாதம் 1 ம் 2ம் 3ம் திகதிகளில் சூரியஒளிர்க்கதிர் கோயிலில் உள்ள லிங்கத்தின் மீது விழும். இந்தக் கோயில் எங்குள்ளது?

கும்பகோணத்தில் இருந்து சுமார் 8 மைல் தூரத்தில் உள்ள திருவிசலூர் என்ற ஊரில் இருக்கும் சிவன் கோயிலில்தான் இந்த அற்புதம் நிகழ்கிறது.

13.நடராஜரின் பாதத்தில் கிடப்பவனின் பெயர் என்ன?

முயலகன் என்பதாகும்.

14. மூலமூர்த்தி வீதி வலம் வருவது எங்கே?

சிதம்பரத்தில் நடராஜர் மட்டுமே!

15. முருகனுக்கு ஏன் ஆறுமுகங்கள்?

கிழக்கு- மேற்கு- வடக்கு- தெற்கு-ஆகாயம்-பாதாளம் ஆகிய ஆறு திசைகளிலிருந்து வரும் பக்தர்களின் குறைகளை உடனுக்குடன் கவனித்து தீர்ப்பதற்காகத்தான் அவருக்கு ஆறு முகங்கள் என்று ஒரு விளக்கம் உள்ளது.



16. எந்தெந்த கடவுளுக்கு எத்தனை கைகள்?

| | |
|---|---|
| இந்திரன் - | நான்கு கைகள் |
| விநாயர் - | ஐந்து கைகள் |
| தத்தாத்திரியன் - | ஆறுகைகள் |
| அக்கினி - | ஏழுகைகள் |
| பிரமன் - | எட்டுக்கைகள் |
| சிவன் - | பத்துக்கைகள் |
| முருகன் - | பன்னிரண்டுகைகள் |

17.எந்த அம்மன் பெயரில் ராகம் தோன்றியது?

மலயாசலம். இங்கு எழுந்தருளியுள்ள அம்மன் தேவி கல்யாணி என அழைக்கப்படுகிறாள். இவள் பெயரில் எழுந்ததே கல்யாணி ராகம் ஆகும்.

18. புனித நதிகள் யாவை?

கங்கை -யமுனை-கோதாவரி- சிந்து- சரஸ்வதி- நர்மதை-காவிரி ஆகும்.

19.மனித உடற்கூறு தத்துவத்தை அடிப்படையாக வைத்துக் கட்டப்பட்ட கோயில் எது?

சிதம்பரம் கோயில். கோயிலில் வேயப்பட்ட 21,600 ஓடுகளும் நாம் ஒவ்வொரு நாளும் விடும் மூச்சின் கணக்கையும் ஓடுகளில் பொருத்தியுள்ள 72,000 ஆணிகள் மனிதனின் நாடிகளின் கணக்கைக் காட்டுகிறது.

தொகுப்பு: ஸாளினி கிருபாகரன்.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. பொன்னையா ஈஸ்வரமூர்த்தி*

# ஓம் சிவ சக்தி ஓம்
# யோகமும் நிதானமும்



யோகத்தை பயில்வோர் அனைவரும் வாழ்வில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். ஆதலினால் இங்கு யோகமும் நிதானமும் பொருள்பற்றி சிறிது நோக்குவோம்.

இயம நியமங்கள் எனப்படும் கட்டுப்பாடுகள் யோகத்தில் நிறைய உண்டு. யோகத்தின் முன்னோர்களாகிய சில குருமார்கள் (எல்லாக் குருமார்களும் அல்ல) தம் சீடர்கள்மேல் மிக மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை வகுத்திருந்தனர். அவற்றால் பல நன்மைகள் உண்டு ஆயினும் அவை எல்லாவற்றையும் ஒழுங்காக இந்த 21ம் நூற்றான்டில் கடைப்பிடிப்பது இயலாத காரியம். அதுவும் இல்லறத்தாராகிய நமக்கு அந்நியமங்களுட் சில அசாத்தியமானதாகும்.

உதாரணமாக ஆறுமுகநாவலர் சைவ நெறிமுறைகளை வகுத்துத் தொகுத்துத் தந்துள்ளார். அதில் ஆலயம் செல்பவர் எவற்றை செய்ய வேண்டும், எவற்றை செய்யக் கூடாது, ஆலயத்துள் எப்படி எப்படி எல்லாம் வழிபட வேண்டும் என்று நுணுக்கமாக ஆராய்ந்து விபரமாக எழுதியுள்ளார். அவற்றை நூறு (100%) நம்மில் யாராலும் கடைப்பிடிக்க முடியாது. அதற்காக யாருமே ஆலையங்களிற்கு போகாமல் இருந்துவிடலாமா? உலகில் உள்ள ஆலயங்கள் எல்லாவற்றையும் இழுத்து மூடிப் பாழடைய விடவேண்டியது தானா? இல்லை,.அதற்கு மாறாக பரம்பரை பரம்பரையாகப் போற்றப்பட்டு வந்த வழிபாட்டு முறைகளின் உட்தத்துவ நுட்பங்களை ஓரளவு ஆராயந்து உணர்ந்து காலம், இடம், பொருட்கு ஏற்ப இணைந்து தற்கால வாழ்க்கைக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் உகந்ததாய் உடல் ஆரோக்கியத்திற்கும் சமய வளர்ச்சிக்கும் வழி காட்டுவதே முறையாகும், அதுவே நியாயமும் ஆகும்; அதுவே நிதானப் பாதையுமாகும்.

நிதானம் என்றதும் நம் எண்ணத்திற்கு தோன்றுவது, ஒன்று மது அருந்துவது பற்றியாகும். நிதானம் வாழ்க்கையில் முழுமையாக வேண்டும். உண்பது, உடுப்பது, உறங்குவது, வேலை பார்ப்பது, அப்பியாசம் செய்வது, கொடுப்பது, எடுப்பது, சேர்ப்பது, துய்ப்பது, கதைப்பது, கழிப்பது இவை போன்றன எல்லாம் தனியார் கருத்தில் இருத்தவேண்டிய நிதானங்கள். கூட்டாகவும் நாம் எல்லோரும் சேர்ந்தும் நிதானப் பாதையைக் கடைப்பிடிக்க வேண்டும். அரசியற் பாதையாகிலென், சமூக சமய முறைகளாயிலென் மிதமான சமநிலையினைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நம் சந்ததியினரிடம் பரந்து வளர்ந்த அனாவசிய பழக்கங்களுள் பிரத்தியேக மானவை இரண்டு. மது அருந்துவதும் புகை பிடிப்பதும் ஆகும். எந்த மதத்தினராயினும் எந்த ஆலயத்தினுள்ளும் புகை பிடிப்பதில்லை. அதே போன்று ஒரு சில மன நோயாளரைத் தவிர யாரும் ஆலயத்தினுள் வெறியாடுவதில்லை. அதோடு இந்துக்கள் மச்ச மாமிசம் உண்டால் அன்று கோவிலுக்கு போவதை தவிர்த்துக் கொள்ளுகின்றனர். அம்மாவையும் பிள்ளையையும் கோவில் வாசலில் இறக்கிவிட்டு அப்பாதான் கோவிலுக்குள் வராமல் ஏதோ சமான் வாங்கக் கடைக்குப் போவதன் காரணம் அப்பா மது அருந்தியதாற்றான் என்பது குழைந்தைக்கே தெரியும் என்ற கதையும் நாம் இடை இடையே கேள்விப்படுகின்றோம். எது எப்படி இருப்பினும் ஆலய தூய்மையைப் பாதுகாக்கும் பழக்கம் நமது சமூகத்தினரிடம் ஊறிப்பதிந்துள்ளதை உணர்ந்து நாம் மகிழ்ச்சியடையலாம். அதேவேளை ஆலயத் தூய்மையை, தெய்வீக ஸ்தானத்தை மேன்மேலும் வருங்கால மக்களிடையேயும் வற்புறுத்த வேண்டும்.

மது அருந்தி நிதானம் தவறிய ஆங்கில நகைச் சுவைக் கதை ஒன்று. இரு நண்பர்கள், பால்ய நன்பர்கள் பல வருடங்கள் கழித்து லண்டன் நகரில் சந்தித்தனர். அருகாமையில் உள்ள ( pub) மதுபானக் கடைக்குள் சென்று உரையாடினர்.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. சின்னத்தம்பி சுகுமார்*

தாம் 6ம் வகுப்பில் ஆடிய கால் பந்தாட்டப் போட்டியில் வென்றதைச் சொல்லி ஒவ்வொரு glass மது அருந்தினர், பின் 7ம் வகுப்பில் math tution எடுத்தனால் grade 'A' கிடைத்ததைச்சொல்லி இன்னுமொரு glass மது அருந்தினர். பின் 8ம் வகுப்பில் ஒரு நாள் வீட்டிற்குப் போகாமல் மடத்தில் படுத்ததைச் சொல்லி மேலும் ஒரு glass போட்டனர். இப்படியாகக் குடித்துக் கொண்டே கடை பூட்டும் நேரம் இரவு 12 மணியானதும் இருவரும் போவதற்கென எழும்பினர். நிற்க முடியவில்லை,. நல்ல காலமாக ஒருவர் மீது ஒருவர் சாய்ந்த படி இருவருமாகச் சேர்ந்து முணு முணுத்தனர்,
"United we stand, divided we fall ", தோழ் மீது தோழ் ஒட்டியபடி " ஒற்றுமையே பலம், ஒன்று பட்டால் உண்டு நமக்கு நிற்கும் நிலை பிரிந்தோமாயின் படார் டொம்."

நிதானத்தை எப்படி கடைப்பிடிப்பது? அதனால் அடையும் நன்மைகள் இலாபங்கள் என்ன? நிதானம் தவறுவதனால் வரும் கஷ்ட நஷ்டங்கள் என்னென்ன?.

நிதானமாகச் சென்றால் பிழை விடுவதற்கு வாய்ப்புக்கள் குறைவு. அதே வேளையில் தற்செயலாக ஏற்படும் ஒரு சில பிழைகளைத் திருத்துவதற்கு வாய்ப்புகள் நிறைய உண்டு. அதாவது குறைகளைச் சிறுத்து நிறைகளைப் பெருக்கும் தன்மை நிதானத்தூடே உண்டு.

குழைந்தை பிறந்ததும் நாள் தோறும் பல மணி நேரம் தூங்கும். வளர்ந்தவர்கள் 6 மணி தொடக்கம் 9 மணித்தியாலம் வரை தூங்கலாம். நற் தூக்கம் ஆரோக்கியத்திற்கு அவசியம். பிறந்த குழைந்தை பல மாதங்கள் வரை தாய்ப்பாலில் மட்டும் வளர்வது நிறை பலனைக் கொடுக்கும். வளர்ந்தோர் தம் பருமன், நிறை, செய்யும் வேலைக்கேற்ப ஒருநாளுக்கு 2 அல்லது 3 முறை அளவாக உண்பது நல்லது. குத்தரிசியுடன் காய்கறி பழங்கள் நிறையச் சேர்த்து உண்பது நற்சுகம் தரும். பருமனுக்கு ஏற்ற நிறை உண்டா என அறிவதற்கு Body mass index - அதை உடல் நிறை நிலை அறிகுறிக் கணிப்பு என்று இப்போதைக்கு அழைப்போம். உயரத்தை (meter) உயரத்தால் பெருக்கி வரும் தொகையால் நிறையை ( kg ) பிரிக்க வேண்டும். அதாவது நிறையை உயரத்தால் பிரித்து மறுபடியும் ஒரு முறை உயரத்தால் பிரிக்க வருவது உடல் பருமன் கணிப்பு ( B.M.I ). Body mass index is the ratio of weight in kg to that of height in meter Squared. In other words B.M.I is the number obtained in dividing the weight in KG by square of the height in meters.

உதாரணம்: நிறை 144 இறாத்தல் = 65.32 கிலோ ( 144 x 0.4536 )

உயரம் 5 அடி 8 அங்குலம் = 1.727 மீற்றர் ( 68 x 0.0254 )

$$\text{Body mass Index} = \frac{65.32}{1.727 \times 1.727} = 21.89$$

B.M.I
- 19 - 26 வரை இருப்பது உகந்தது, உத்தமம்
- 26 - 29 வரை இருப்பது மத்திமம்
- 30 - 40 வரை உள்ளோர் மிகக் கவனமாக ஆரோக்கியத்தைப் பேண வேண்டும்
- 40- மேல் உள்ளோர் வைத்தியரின் ஆலோசனையுடன் நிறையை குறைக்க வேண்டியது அவசியம்.

பரம்பரைச் சொத்தை, பாடுபட்டுச் சேர்த்த பணத்தை, அதிஸ்டவசமாக வாய்த்த பொருளை ஊதாரித்தனமாகச் செலவு செய்வதும் நிதானமற்ற செயலாகும்.

சொல்லில் நிதானம் மிக முக்கியம். தற்கால வாழ்விற் குடும்பத்திற்குள்ளும் வெளியிலும் உறவினரிடையேயும் சினேகிதருக்குள்ளும் சகலரிடமும் ஏற்படும் சச்சரவுகளுக்கு முக்கிய காரணம் நிதானமற்ற சொற்களே ஆகும். நா காத்தல் இன்றியமையாத தொன்று என்பதை நமது ஆசான் வள்ளுவர் முதல் எல்லாப் பெரியோரும் வற்புறுத்தி உள்ளனர். ஆண்டு தோறும் வயதில் முதுமை பெறும் நாம், சிறியோரும் விளங்கும் முறையில் நம் வார்த்தைகளை அளந்து பேச வேண்டும். சிறு பிள்ளைகள் ஒரு பாதையிற் போகும் பொழுது தாம் கண்ட பூக்களை பூண்டுகளை பிடுங்கியும் போகும் வழியில் உள்ள சேறு சகதிகளுக்குள் குதித்து மிதித்து விளையாடிச் செல்வர். வளர்ந்த நாம் அப்படிச் செய்வதில்லை. ஒரு வீதியில் நடக்கையிற் காணும் வீடுகள் கட்டிடங்களுக்கோ, போவோர் வருவோருக்கோ கல் எறிவதில்லை. அப்படிப்பட்ட நல்ல குணமுள்ள நாம் ஏன்தான் பிறருடன் கதைக்கும் பொழுது அவர்கள் மனம் நோகச் சொல்லால் அடிக்கின்றோம். கல்லால் அடியாத நாம் சொல்லாலும் அடியாது பழகிவிட்டோமானால் நம் உறவுகள் எவ்வளவு சிறப்புறும் என்பதை நாம் தவறாது சிந்திக்க வேண்டும்.

இப்படியாக இளம் பிராயத்திலேயே நிதானத்தைக் கடைப்பிடிக்கும் மனப்பக்குவத்தைப் பெற்றோரது உள்ளத்துள் யோக தத்துவம் தானாக உள் நுழைந்து, ஊர்ந்து, உறைந்து, படர்ந்து பரவும்

என்பதில் ஐயமில்லை. .

ஓம் சிவ சக்தி

வி. தி

---

# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பொன் மொழிகள்

இவ்வுலகில் ஒரே ஒரு சமயம் அல்லது தர்மம்தான் உண்டு. அது அன்பின் அடிப்படையில் அமைந்த தர்மம். ஒரே ஒரு பொன் மொழிதான் உண்டு, அது இதயம் பேசும் மொழி. ஒரே இனம்தான் உண்டு. அது மனித இனம். ஒரே ஒரு கடவுள்தான் உண்டு. அது எல்லாம் வல்ல இறைவன்.

உன்னுடைய ஒவ்வொரு நாளையும் அன்போடு தொடங்கு. நாள் முழுவதையும் அன்பால் நிரப்ப அனைவரிடத்தும் அன்பு காட்டி அந்த நாளை செலவிடு. அன்புள்ளத்தோடு அந்த நாளை முடித்துவிடு. கடவுளை அடைய இதுதான் சிறந்த வழி.

தீயவற்றை சிந்தியாதே, நல்லவற்றையே சிந்தனை செய் கெட்டவற்றை காணாதே நல்லவைகளையே காண முயற்சி செய். தீயவைகளை காதால் கேட்காதே நல்ல விசயங்களையே கேள். தீய சொற்களை பேசாதே. இன் சொற்களையே பேசு தீமைகளை செய்யாதே. நன்மைகளை செய். இப்படி பழக்கப்படுத்திக் கொள்வாயானால், தவறான செய்கைகளும், தீய பழக்கங்களும் உன்னை அணுகாது.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - அம்பாள் அடியார்*

# அறிவுக்கு விருந்து

இன்றைய தினத்தையே பார். ஏனென்றால் இதுதான் வாழ்க்கை. வாழ்க்கையின் சாரம்சமான வாழ்வு அதன் குறுகிய ஆயுளில் அனைத்தும் அடக்கம். உண்மையான வாழ்வு, அதன் பல தோற்றங்கள் வளர்ச்சி என்ற ஆனந்தம், செயலின் கம்பீரம் அதிகாரத்தின் மகத்துவம் எல்லாம் இன்றே. ஏனென்றொல் நேற்று என்பது கனவு. நாளை என்பதோ கற்பனையின் தோற்றம். ஆனால் இன்றைய நல்வாழ்வு ஒவ்வொரு முன்தினத்தையும் ஆனந்தக் கனவாக்குகிறது. நாளைய தினத்தைக் கண்முன் காட்டுகிறது. அதனால் இன்றைய தினத்தையே பார். கவனத்துடன் உற்சாகத்துடன் திட்டமிட்டுப்பார்.



நடந்தால் நல்லது. நடக்காவிட்டால் அது மிக மிக நல்லது என்று இறைவன் தீர்மானித்து இருக்கிறான் என்று தெளிந்திட எல்லாம் நன்மையே.

ஓரறிவு பெற்றவை - புல், மரம், தாவரங்கள்

ஈரறிவு பெற்றவை - நத்தை, சிப்பி, மீன் இனங்கள்

மூன்றறிவு பெற்றவை - கறையான், எறும்பு இனங்கள்

நாலறிவு பெற்றவை - வண்டு, தும்பி இனங்கள்

ஐந்தறிவு பெற்றவை - விலங்கினங்கள்

ஆறறிவு பெற்றவர்கள் - அறிவுடைய மனித இனம்.

தொகுப்பு: இணுவைக்குமரன்

# வாழ்க்கையின் இலட்சியம்

இறைவனின் ஒரு பெருந்திட்டம் உள்ளது. நாம் ஆற்றவேண்டிய பெரும் கடைமைகள் உள்ளன. நீங்கள் உங்கள் கடைமைகளை சிறப்பாக ஆற்றுங்கள். பரம் பொருளின் தாமரைப் பாதங்களில் மனம் மாறாத பக்தி வைத்திருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள், புனிதமான பேரன்பக்கடலில் நீந்துங்கள்.

பிறப்பும், இறப்பும், கட்டுப்பாடும், சுதந்திரமும், இன்பமும், துன்பமும், இலாபமும், நட்டமும், மனத்தால் உண்டாக்கப்பட்டவை. மாறுபட்ட பிடிப்புகளிலிருந்து மீண்டும் வாருங்கள். உங்களுக்குப் பிறப்பில்லை, இறப்பில்லை. அழிவற்ற இறைவன் நிலையைப் பெறுவீர்கள்.

உடல் மேல் பற்றுக் கொள்ள வேண்டாம். பாம்பு சட்டையை உரிப்பதுபோல பற்றைத் தூக்கி எறியுங்கள். எப்போதும் கவலையின்றி இருக்க முடியும். இந்த பூத உடம்பு அழியும், மறுபடியும் வரும். " நான் இறப்பேன் அல்லது இறைவனை உணர்வேன் " என்று உறுதி கொள்ளுங்கள். தளரா உறுதியையும், துணிவையும், ஆண்மையையும் காட்டுங்கள்.

ஓ அன்புக்குரியவரே! ஒளிக்கெல்லாம் ஒளியான பிரம்மத்தோடு உங்களைப் பிரிக்க முடியாது ஐக்கியப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது உங்களை எதுவும் தொல்லைப் படுத்து முடியாது. அழிக்கமுடியாதவராகி விடுவீர்கள்.

மாயையைப் பற்றிய பயம் இப்போது உங்களுக்கு தேவையில்லை. மாயை உங்கள் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கிறாள். சற்றுத் தெலைவில் உள்ள பாறையைப் போல உறுதியாக நில்லுங்கள். பிடிவாதமாக இருங்கள். சீறிய சிங்கம் போல் நடமாடுங்கள்

சுவாமி சிவானந்தர்

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - செல்வன். நிலேஸ் வசந்தகுமார்*

# சைவ மண்ணில் ஒரு வேதாந்தி

சைவ நூல்களை தேடிப்பிடித்து பதிப்பித்து, அவற்றிற்கு உரைகண்டு அவற்றிலே கூறப்பெற்ற சமயவுண்மைகளை, எளிமையுடன் எழுத்தாலும் பேச்சசாலும், அறிமுகம் செய்து, சைவதூசணங்களை பரிகரித்து, சைவத்திற் புகுந்துவிட்ட புல்லுருவிகளை களைந்து, சைவசமய வளர்ச்சிக்கு வேண்டிய நிறுவனங்களின் தோற்றத்திற்குக் காலாகி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (1822-1879) சைவசமயத்தினைப் புறச் சமயிகளின் மூர்க்கமான பிரசாரத்தின் முன்னே, தமிழ் மண்ணிலே நிலை நிறுத்த வேண்டியிருந்தது. அடைகாக்கும் கோழி தன் குஞ்சுகளை எவ்வளவு ஆவேசத்துடன் பாதுகாக்க முற்படுமோ அவ்விதமே நாவலர் பெருமான் அந்நிய மதப்பரம்பலின் முன்னே சைவத்தினை பாதுகாக்க முற்பட்டார். அதனால் அவர் வழி கடினமாகவும் ஆட்சேபத்திற்கு இடம் தரத்தக்கதாகவும் அமையவேண்டியதாய் இருந்தது. சுய சிந்தனைக்கு இடமளித்த நாவலர் பெருமானுக்குச் சமயப் போக்கிலே காலமோ சமயமோ இருக்கவில்லை. கிறித்தவப் பணி அவருக்கு முன்மாதிரியாக அமைந்தது. அதனாலேயே அவர் சைவ பாரம்பரியத்தை கட்டிக் காக்க முடிந்தது.



சிவாகமங்களே சைவத்தின் மூலாதாரமாக அமைந்ததால், நாவலர் பெருமான் சிவாகமவுணர்ச்சி மிக்கவராய் அதன் தலை சிறந்த பிரசாரக்காரராய் விளங்கினார். வேதத்தினை அவர் சைவசமயத்தின் பிரமாணமாகக் கொள்ளவில்லை. வேத வழக்கு வேறு சைவவழக்கு வேறு என்பதை அவர் பெரியபுராண சூசாசனத்திலே உணர்த்தியுள்ளார்.

சைவசமயிகளுக்கு ஏற்பட்டிருந்த மயக்கங்களைப் போக்கி, அவர்களிடையே சைவசமய அறிவும் தெளிவும் ஏற்படச் செய்து.. ஈழத்திலே சைவசமயத்தினைத் துலாம்பரமாக நிலைநிறுத்திக் காட்டியவர் நாவலர் பெருமான். 1846 ஆம் ஆண்டு முதல் 1879ஆம் ஆண்டுவரை, மூன்று தாசாப்தங்களுக்குச் சற்று மோலக, அவர் புரிந்த சைவப் பிரசாரத்தினால் ஈழத்தின் மண்ணிலே சைவபாரம்பரியம் நின்று நிலைக்கலாயிற்று. நாவலர் பெருமான் 1879ஆம் ஆண்டு ஆடியிலே சிவபரிபூரணம் எய்தினார். அக்காலை சேர். பொன்னம்பலம் இராமனாதன், The champion refomer of the Hindus, என்று அவர்களை சட்டசபையிலே விதந்து போற்றினார்.

நாவலர் பெருமான் நிலைநிறுத்திய சைவபாரம்பரியத்தின் நிலைக்களமான மண்ணிலே 1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி சுவாமி விவேகானந்தர் கால்வைத்தார். அவர் கொழும்பிலிருந்து கண்டி, மாத்தளை, அநுராதபுரம் வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தார்.

நாவலர் பரம்பரையில் அன்று ஈழத்திலே சிறப்பிடம் வகித்துக்கொண்டிருந்தவர்கள் சித.மு.பசுபதிச் செட்டியார் (1856 - 1906), வித்துவசிரோமணி ச.பொன்னம்பலப்பிளளை (1837 - 1897) மனேஜர் த.கைலாசபிள்ளை ( 1855 - 1919), மா. வைத்தியலிங்க பிள்ளை (? - 1902) மாதகல் சு. ஏரம்பையர் (1848 - 1914) சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் (1854 - 1922) முதலியோராவர். நிருவானத்தீட்சை பெற்றுச் சிவபூசை எழுந்தருளச் செய்து விதிப்படி நைட்டிகமாக இருந்த பசுபதிச் செட்டியார், நாவலர் பெருமானின் எண்ணங்களை கருத்துக்களை செயற்படுத்த முன்னின்று உழைத்தவர். சைவ சமய பரிபாலன சபை, இந்து உயர்தரப் பாடசாலை திருக்கேதீச்சரப் புனருத்தாரணம் என்பவற்றிலே அவர் புரிந்த பணிகளை சைவ உலகம் போற்றி நின்றது.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. கஜன் மகேந்திரன்*

வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை மாமனார் நாவலரவர்களைப் போன்று கைம்மாறு வேண்டாது கல்வி கற்பித்து நாவலர் மரபிற்கு சிறப்புத் தேடித்தந்தவர்.நாவலர் அவர்களின் பெறாமகன் த. கைலாசப்பிள்ளை, நாவலர் பெருமையைக் குறைத்து மதிப்பிடும் முயச்சிகளை வன்மையாக எதிர்த்தும் நாவலர் மரபைப்பேணும் முறையை வளர்த்தும் செயற்பட்டவர். வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே 1867 முதல் 1902 வரை முதலுபாத்தியாராகத் திகழ்ந்து சைவக் கல்வி மரபிற்கு உயர்ச்சியும் ஊக்கமும் தந்தவர் மா. வைத்தியலிங்கம்பிள்ளை. நிருவாணத்தீட்சை பெற்று சிவபூசைஎழுந்தருளப்பண்ணிக் கொண்டு, அதனை கிரமமாக செய்து வந்த மாதகல் ஏரம்பையர் கீரிமலை வித்தியாசாலையிலும் குருவகுப்பிலும் சிவப்பிரசங்களிலும் பேரெடுத்தவர் நாவலரவர்களின் காலத்திற்குப் பின்பு வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை உயர்தரக் கல்விப்பீடமாக உயர்த்திய பெருமையில் குமாரசாமிப் புலவருக்கு முக்கிய பங்குண்டு.

சைவ சமய பரிபாலனசபை 1888இலே தோற்றம் பெற்றுத் தன் பெயருக்கேற்ப சைவபரிபாலனத்துக்கு வேண்டிய வழித்துறைகளை ஆராய்ந்து சிறப்பாக பணிசெய்து கொண்டிருந்தது. தனி மனித சக்தியாக முன்னர் ஒருவர் செலுத்திய தாக்கத்தினை நிறுவனரீதியிலே சைவபரிபாலனசபை தொடர்ந்து செலுத்தக்கூடியதாக இருந்தது.

சைவசமயிகளின் கருத்துக்களையும் விடயங்களையும் பொதுமக்களுக்கு வெளியிட முன்பு இலங்கை நேசன் (1875) ஈழத்திலே பிரசுரமாகியது. சைவ உதயபானு (1880), சைவாபிமானி (1884), இந்து சாதனம் அல்லது The Hindu organ ( 1889) என்பன நாவலருக்கு பின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசித் தாசாப்தங்களிலே வெளிவந்து கொண்டிருந்தன.

வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை (1884) போன்ற வித்தியாசாலை மட்டுமன்றி இந்து உயர்தரப்பாடசாலை (Native town high School) யாழ்பாணம் இந்துக் கல்லூரி (1889), சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி பேன்றவை சைவப்பிள்ளைகளின் மதாநுசாரச் சூழலில் இடைநிலைக் கல்வித்தாபனங்களாகத் தோன்றி அருஞ்சேவை ஆற்றிக் கொண்டிருந்தன.

அநாதரவான நிலையிலிருந்து சைவசமயிகள் தம் மதாநுசாரங்களையும் பாரம்பரியங்களையும் போற்றிப்பேணித் தம் மண்ணிலே கிளைவிட்டு நிற்கத் தொடங்கிய கட்டத்திலே சுவாமி விவேகானந்தர் " கோர்ச் " மூலம் யாழ்ப்பாணம் 1897 ஜனவரியிலே போய்ச் சேர்ந்தார். நாவலர் மரபு ஆகமங்களுக்கு முதன்மை அளித்தது. வேதங்களைப் பொது நூல்கள் என ஒதுக்கி விட்ட மரபு அந்த மரபின் செல்வாக்கு உயிர்ப்புடன் நிலவிய மண்ணிலே அகில உலக ஒற்றுமைக்கு அடிப்படையாக வேதாந்தத்தினைப் பிரசாரம் செய்த சுவாமி விவேகானந்தர் போய் இறங்கினார் சைவ மண்ணிலே அவருக்கு பெரும் வரவேற்ப்புக் காத்திருந்தது.

யாழ்ப்பாணத்திலே இந்து சாதனம் அதற்குரிய சூழலை ஏற்கனவே உருவாக்கியிருந்தது. சுவாமி விவேகானந்தர் வெளிநாடுகளில் ஆற்றிய பேச்சுக்களையும் அப்பொழுது அவர் பெருமைப்படுத்தப் பெற்ற வாழ்வினையும் அது தெளிவாக எடுத்துக் கூறிக் கொண்டே வந்தது. அத்தோடு புறச்சமயிகள் இவருக்கு எதிராக எடுத்த நிலையையும் அது வெகுவாக கண்டித்து வந்தது. இந்திய பாரம்பரியத்தின் பெருமைகளை எடுத்துக் காட்டிய தலைமகனைப் புறச்சமயிகள் இழித்துக் கூறியதால் இந்து சாதனம் அவர்களை விட்டுவைக்கவில்லை. யாழ்ப்பாண கிறிஸ்தவப் பத்திரிகை உதயதாரகை சுவாமி விவேகானந்தருக்கு எதிராக அன்றெழுதிய கண்டனங்கள், எதிர்முகமாக உதவின சுதேசிய மதாநுசாரிகள் அவரைக் கனம் பண்ணி கௌரவம் செய்தன. யாழ்பாணமக்களுக்குச் சுவாமி விவேகானந்தர் கீழைத்தேச பிரதிநிதியாக உயர்ந்து நின்றார்.

சுவாமி விவேகானந்தர் சமய தத்துவ சுழற்சியிலே சிக்கி விடவில்லை. அவர் தத்துவம் இந்திய சிந்தனைகளின் ஒருமைப்பாடும் தொன்மையும் அவையுணர்த்தும் தேசியமுகமாகச் சிறப்புற்றது. தத்துவவிசாரம் அவருக்கு வேண்டியதாக இருக்கவில்லை. இந்திய தேசியத்தினைத் தட்டிவெழுப்பும் கருவியாகச் சனாதன தர்மத்தினை அவர் கண்டு கொண்டார்.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. செல்லையா சச்சிதானந்தன்*

எல்லாச் சமயங்களும் கடவுளை அடையும் மார்க்கங்களே என்றும், ஒன்றோடு ஒன்றை முரணாக வைத்து நோக்கவேண்டிய அவசியமில்லை என்பதையும் சுவாமி விவேகானந்தர் தெளிவாக வற்புறுத்தினார். இதனால் சமயங்களிடையே பகைமையுணர்விற்கு இடமில்லை என்பது அவர் கருத்து. எல்லாச்சமயங்களும் அடிப்படையாகக் கொள்ளுவது " மக்கள் சேவையே மகேசன் சேவை " என்னும் தாரகமந்திரமாகும். மக்களின் ஏழ்மையை அகற்றி அவர்களிடையே தன்னம்பிக்கையையும் விழிப்புணர்ச்சியையும் தூண்டுதல் இன்றியமையாதது என்பது சுவாமிகளின் கருத்து.

சுவாமி விவேகானந்தரின் போதனைகள் ஆங்கிலக் கல்வி பெற்ற புத்தி ஜீவிகளிடையே குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்த தவறவில்லை. தம்மை தனிமைப் படுத்திக் கொள்ளும் பழக்க வழக்கங்களை விடுத்து ஏனையோரோடு இணைந்து போகும் நோக்கினை சுவாமிகள் வற்புறுத்தியபோது அதனை ஆதரிக்கும் மனோபாவும் அவர்களுக்கு ஏற்பட்டது. சமயத்திலும் சமய பழக்க வழக்கங்களிலும் நெறி பிறழா விதி முறைகளை விடுத்து பின்பற்ற இலகுவான நெறிமுறைகளை தழுவும் கருத்தினை ஏற்பதற்கும் சுவாமிகளின் போதனைகள் காலாயின.

சைவ சித்தாந்தத்தின் கருத்தினை ஆங்கிலத்தில் எழுதிய முத்து குமாரசுவாமிகள் பின்பு வேதாந்த சித்தாந்த அமைதி கொண்ட தாயுமான சுவாமிகளின் பாடல்களை ஆங்கிலத்தில் வழங்கினார். ஆறுமுக நாவலரின் பணிகளைச் சட்ட சபையிலே ஞாபகமூட்டிய பொன்னம்பலம் இராமநாதன் பின்பு பகவத் கீதையைத் தமிழிலே வழங்கினார்.

மரபு வழிநின்ற சைவ அறிஞர் வேதாந்தத்தினை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அதனை மாயாவிதம் என நிராகரிக்கும் மனோபாவத்தினை ஆறப்போட்டுக் கொண்டனர். இந்நூற்றாண்டிலே வேதாந்த மரபொன்று யாழ்பாணத்திலே கால் கொள்ளும் சூழல் அதனால் உருவானது, ஆயினும் அம்மரபு சைவமண்ணிலே நின்று நிடிக்க முடியவில்லை.

பொதுவாகக் கூறின் சுவாமி விவேகானந்தருடைய போதனைகள் சைவரை வேதாந்தத்தினை அங்கீகரிக்க செயயாவிடினும் அவர் தம் தீவீர தரத்தினைக் குறைக்கவும் நோக்கினை விரிவுபடுத்தவும் உதவிய்து எனலாம்.

சுபம்

காலாகீர்த்தி, டாக்டர். பொன் பூலோகசிங்கம்



# வையமெல்லாம் நீ நிறைந்தாய்

மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவது வழிபாடாகும். நமது முன்னோர்கள் எமக்கு கற்பித்த வாழ்வியலும் இதுவே. பிறப்பு முதல் இறப்புவரை மனிதன் ஒழுங்குபட வாழ்வதற்கு வழிகாட்டும் ஒழுகலாறே வழிபாடு. இந்த வழிபாடு தனிநிலையிலும் கூட்டுநிலையிலும் செயற்படுத்தப்படுகிறது. திருக்கோவில்கள் வழிபாடு செய்ய ஏற்ற இடங்களாக அமைந்துள்ளன. எல்லோரும் ஒன்றுகூடி
இறைவனைப் பற்றி அறியவும் எண்ணிப்பார்க்கவும் கோயில்கள் துணைசெய்கின்றன.

வழிபாட்டுமுறைமையில் சக்திவழிபாடு மிகவும் பழமையானது என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. சக்தி என்னும் பேராற்றலே உலகுக்கெல்லாம் உறுதுணையானது.அவள் பேரரசி எனவும் உலகை ஈன்ற அன்னை எனவும் பெண்மை வடிவிலே போற்றப்படுகிறாள். வையகத்தை ஆளும் தெய்வமாக அன்னை பராசக்தி விளங்குகிறாள். உலகத்துமக்களுக்கெல்லாம் அவளே தாய். உலகமே உடலாக அதற்குள்ளே உயிராக விளங்கும் தெய்வம் என நிலைபெற்று விளங்குகிறாள். மனித வாழ்வியலில் குழந்தையைப் பெற்றெடுத்த தாய் அதனை கண்ணுங்கருத்துமாய் வளர்ப்பது போல அன்னை பராசக்தி எல்லோரையும் காத்துநிற்பாள் என்ற நம்பிக்கையே எமது வழிபாட்டின் அடிப்படை நம்பிக்கையாக நிலைபெற்றுள்ளது.

இந்த அன்னையைப் பல்வேறு வடிவங்களிலே கண்டு வழிபடுகின்றனர். அன்னையின் வடிவத்தை இயற்கையின் தோற்றத்திலே கண்டவர் கவிஞர் பாரதியார்

"காலை இளவெயிலின் காட்சி -அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி
நீலவிசும்பின் இடை இரவில்- சுடர்
நேமி அனைத்தும் அவள் ஆட்சி."

எம் கண்ணுக்கு முன்னே தோன்றும் இயற்கைக் காட்சியை அவள் தோற்றமாக நாம் உணரும் போது அவளே என்றும் எம்மை காத்து நிற்பது தெளிவாகின்றது.

திருக்கோவில் வழிபாட்டிலே அன்னையின் வடிவு துர்க்கை, காளி, மாரி, இலக்குமி, சரஸ்வதி, பராசக்தி எனப் பல உண்டு. பராசக்தியின் வடிவிலிருந்து ஏனைய வடிவங்கள் தோன்றியது. எமது மனித வாழ்வியலில் தாயின் தோற்றத்தைப் பல்வேறு நிலைகளிலே காண்கின்றோம். எமக்கு உணவூட்டி எமது உடலுக்கு பலம் தருபவளாக எமக்குக் கல்வியூட்டி அறிவுநிலை பெறச் செய்பவளாக எமக்குப் பொருள் தந்து செல்வவளம் உடையவராக ஆக்குவதற்கு அன்னையே தன்னையே முழுமையாக தொண்டுப் பணியில் ஈடுபடுத்தியுள்ளாள். அவள் பணிக்கு யாருமே ஊதியம் வழங்குவதில்லை. தன்னலம் கருதாது பிறர்நலம் கருதிப்பணி செய்யும் தாயன்புதான் நாம் வழிபட்டு வணங்க வேண்டியது. அதனாலே தான் இயற்கை எமக்குத்தேவையானவற்றை ஏற்ற காலத்திலே கொடையாக நல்குவதை நாம் உணர்ந்த போது இயற்கையை அன்னையாகவே கண்டு வணங்கிப் பணியும் வழிபாட்டு மரபும் தோன்றியது.



மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத உணவு உற்பத்திக்கு மழை வேண்டும். அந்த மழை காலம்கண்டு பெய்வதால் மாரி எனப்பட்டது. மாரி தெய்வமாக மதிக்கப்பட்டது. மழையின் இன்றியமையாமையை உலகம் முழுவதும் உணர்ந்தபோது மாரி வழிபாடு உலகம் எங்குமே பரவியது. இதனையே பாரதி "உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரி உன்பாதம் சரண்புகுந்தோம்." என்று தெளிவாகப் பாடினான். நவராத்திரி என்னும் வழிபாட்டு நடைமுறை சக்தியின் மூன்று வடிவுகள் போற்றப்படும் நிலையை உணர்த்துகிறது. ஒன்பது நாள் வழிபாட்டில் முதல் மூன்று நாட்கள் துர்க்கையின் வடிவிலும் அதற்கடுத்த மூன்று நாட்கள் இலக்குமி வடிவிலும் அதற்கடுத்த மூன்று நாட்கள் சரஸ்வதி வடிவிலும் சக்தி வழிபாடு நடைபெறுகிறது. துர்க்கை அழிக்கும் சக்தியாகவும், இலக்குமி ஆக்கம் தரும் சக்தியாகவும்,சரஸ்வதி அறிவுதரும் சக்தியாகவும் போற்றப்படுகின்றனர்.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. சின்னத்தம்பி சேகர்*

இம்மூன்று சக்திகளையும் வழிபடும் மரபிலே துர்க்கை வழிபாடு தனித்துவம் பெற்றதாய் விளங்குகிறது. துன்பங்களை எல்லாம் துடைத்தெறியும் அன்னையாக துர்க்கை சிறப்பாகப் போற்றப்படுகின்றாள். இவள் ஆற்றல் பற்றி பாரதி கூறுகிறார்

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
மாநிலம் காக்கும் வலியே சக்தி
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி
சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணை அளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத்து ஒளிரும் விளக்கே சக்தி

துர்க்கை வழிபாடு இன்று உலகமெல்லாம் நடைபெறுகின்றது. சிறப்பாக தாய் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வாழும்தமிழர் நாம் சென்ற இடங்களில் துர்க்கைவழிபாட்டை தொடர்கின்றனர். இன்னல்கள் வந்தபோது இடர்கள் குறுக்கிட்டபோது துன்பங்கள் தொடர்ந்த போது வறுமைவாட்டியபோது உறவுகளைப் பிரிந்தபோது நட்புகளை இழந்த போது உறைவிடத்தைத் துறந்தபோது துர்க்கை வழிபாடுதான் எல்லோருக்கும் துணைநின்றது. அவளை நம்பித்தொழுவதே நமக்கு வழி என எண்ணிக்கும்பிட்டு வாழும் மனம் அல்லல் தீர்ந்து இன்பம் அடையும். அனைத்தும் நீயே என அடைக்கலமாக அவள் திருவடி பணிந்து வாழும் பண்புநிலையே சிறந்தது. அன்னை அவளே துணை என்று அமைதி கொண்டு நெஞ்சம் துவளாதிருப்பதே நிலையான சுகமாகும்.

" பயன் எண்ணாமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னான்
துயர் இலாது எனைச் செய்து விட்டாள்
துன்பம் என்பதனைக் கொய்துவிட்டாள்' " எனப் பாரதி தன் வழிபாட்டு அனுபவத்தைக் கூறியுள்ளார். கோயில் வழிபாட்டில் இந்த வாழ்வியல் நடைமுறையில் உள்ளது. சிறப்பாக எல்லோரும் கூடி உழைக்கும் இடமாகவும் துயரங்களை மறந்து தொண்டு செய்யும் இடமாகவும் கோவில் அமைந்துள்ளது. கோயில் மூன்று நிலைகளில் உள்ளத்தை நிறைவிக்கிறது. தூய்மை, அழகு, விருப்பு எனும் பண்புநலங்கள் வளரத்துணை செய்கிறது. கோவிலையும் அதன் சூழலையும் தூய்மை செய்து அழகுபடுத்தி ஒளியேற்றும் போது மனதில் ஏற்படும் நிறைவு எல்லோரையும் கோவில் வழிபாட்டில் ஈடுபாடு கொள்ளச் செய்கிறது. அங்கு கூட்டுநிலையால் ஏற்படும் நட்பு மன இறுக்கத்தை நெகிழச்செய்கிறது. அந்த நெகிழ்வு பிறர்மீது அன்பு கொள்ளத்தூண்டுகிறது. அந்த அன்புநிலை எம்மை தொண்டு செய்ய ஆற்றுப்படுத்துகிறது.இதுவே எமது முன்னோர் எம்மிடம் கையளித்த வழிபாட்டு முறைமை அதனை நாமும் எமது பின்னவரிடம் கையளிப்பதே எமது கடன். வையமெல்லாம் நிறைந்த அன்னையை அனைவரும் கண்டு வணங்கி வழிபடப் பணிசெய்வோம்.

என்கடன் பணிசெய்து கிடப்பதே.



கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ்
வருகை ஆய்வாளர்
கச்சுயின் பல்கலைகழகம்
ஜப்பான்.

# தேடு மனமே தேடு!

காலமெனும் தேவியவள் ஆடுகின்ற மேடைதனில் நாம் தேடுவது தான் என்ன? என்ற கேள்விக்கு ஆயிரம் பதில்கள் இருந்தாலும், எமது மக்களின் இன்றைய வாழ்வும் தேடல்களும் பற்றிய சிந்தனைத்துளிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதே இந்தக்கட்டுரையின் நோக்கமாகும். மனித வாழ்வு கற்காலம் தொட்டு இன்றைய கணினி யுகம் வரை மாற்றங்களும் போராட்டங்களும் நிறைந்ததாகவும், அதன் காரணங்களைத் தேடியதால் விஞ்ஞான வளர்ச்சியில் எத்தனையோ சாதனைகளை, புதிய பரிமாணங்களைக் கொண்டதாகவும் வளர்ந்து வருகிறது. சூழ் நிலைமாற்றங்கள் மனித வாழ்வின் உயர்ச்சிக்கு வேண்டியவைதான். ஆனால் மனித வாழ்வின் அர்த்தங்கள் என்றைக்குமே மாறக் கூடாது. "கனடாக் காற்று சிலரை மாற்றிவிட்டது". என்று நம்மவர்கள் அடிக்கடி பேசுவதைக் கேட்கின்றோம். மாற்றங்கள் வேண்டியவைதான். இந்த நாட்டின் சீதோஷ்ண நிலைகளுக்கேற்ப ஆடைகளில் மாற்றம் இருக்கவேண்டும். இந்த நாடும் சூழலும் ஆடைகளை மாற்றலாம். எங்கள் உள்ளத்தின் உணர்வோடு கலந்துவிட்ட பண்பையும், பாரம்பரியங்களையும் உறவு முறைகளையும் கூட மாற்றுமா???.

வசதிகளைத் தேடியல்ல, வாழ்வைத் தேடி தாய் நாட்டைவிட்டே ஓடிவந்தவர்கள் நாங்கள். எம்மவர்களில் சிலர் வசதிகளைத் தேடப் புறப்பட்டு, வாழ்வையே தொலைத்துவிட்டு நிற்கின்ற அவலத்தைக் காண்கின்றோம். பொருள், பதவி தேடும் பேராசையில் போட்டி, பொறாமையின் வயப்பட்டு, உண்மைப் பொருளை தேட மறந்து துரோகங்களும், மனவிரக்தியும், அதனால் நோய்களும் நிறைந்த வாழ்வையே தேடிக் கொள்வதைக் காண்கிறோம். "இணைபிரியோம் இனி"" என்று இல்லறத்தில் புகுந்தவர்கள் இரண்டொரு ஆண்டுகட்குள்ளேயே வேறு துணை நாடி அதனால் வேதனையைத் தேடி நரகத்தில் வீழ்வதைக் காண்கின்றோம்.

எம்மவர்க்குள்ளேயே ஏமாற்றுவித்தைகள் ஏராளமாவதைக் காண்கிறோம். இளைய சமுதாயம் வன்முறையை நாடி தன் இனத்திற்கே மாறாத வடுக்களைத் தேடித் தருவதைக் காண்கிறோம். தாயகத்திலே பண்போடும் பெருமையோடும் வாழ்ந்த இனம் புலம் பெயர்ந்த நாடுகளில் தன்னை பெருமையோடு அடையாளம் காட்டுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதைக் காண்கின்றோம். இத்தனை அவலங்களுக்கும் அடிப்படைக் காரணம் என்ன?

உலகின் எந்த மூலையில் பார்த்தாலும் பஞ்சமா பாதகங்கள் மலிந்து கொண்டு போவதைப் பார்க்கின்றோம். பூச்சி, புழுக்களையே கொல்லப்பயந்த மனிதன் இன்று மனிதனையே கொன்று மலக்குழிக்குள் புதைத்துவிட்டு, ஏதும் அறியாதவன் போலிருக்கும் மகாகொடுமையைக் காண்கிறோம். மனித குலத்தை, விலங்கினத்தை மட்டுமல்ல, புல் பூண்டுகளையே அடியோடு அழித்துவிடும் நாசகார அணு ஆயுத உற்பத்திப் போட்டியில், ஆன்மீகத்திற்கு பெயர் போன நாடுகள் கூட போட்டா போட்டியில் இறங்கியிருக்கும் கொடுமைகளைக் காண்கின்றோம். மனிதாபிமானத்தை மறந்துவிட்டு, ஆணவச் செருக்கோடு தம் அதிகார பலத்தைக் காட்ட முனையும் சில நாடுகள் அழிவுப்பாதையை நோக்கி ஓடுவதால் விளையும் பேரபாயத்தையும் மனித இனம் சந்திக்க வேண்டியிருக்கிறதே! இத்தனை அவலங்களுக்கும் காரணங்கள் தான் என்ன?

தாயகத்தின் பக்கம் ஒருகணம் உங்கள் பார்வையைத் திருப்புங்கள் கண்ணீரும், செந்நீரும் பெருக்கெடுத்து ஓடுகிறது அங்கே!. ஆணவச் செருக்கோடு, எம்மினத்தையே அடிமைப்படுத்திவிடத் துடிக்கின்ற கொடுங்கோல் ஆட்சியின் கோரப்பிடியில் எமது மக்கள் படுகின்ற துன்பங்களை வார்த்தைகளில் வடித்துவிட முடியுமா? அங்கே மனிதம் தன் புனிதத்தை இழந்து மரணப்படுக்கையில் குற்றுயிராய்த் துடிக்கின்றது. நீதி தேவதை தன் கண்களை நிரந்தரமாகவே மூடிவிட்டாள். எம்மின மக்களை கற்பழிப்பதும் (பாலியல் வன்முறை) சித்திரவதை செய்வதும், கொலை செய்வதும், புதைகுழிகளுக்குள் மறைத்துவிடுவதும் பேரினவாத சிப்பாய்களுக்கு பொழுதுபோக்காகிவிட்டது. அறியாப் பருவத்தில் பெற்றாரை, உற்றாரை இழந்து அநாதைகளாய் அலைந்து பசிக் கொடுமையிலும் அரவணைக்க யாருமின்றி இரத்தக் கண்ணீர் சொரியும் பச்சிளம் குழந்தைகள் ஆயிரம் ஆயிரமாகப் பெருகிவிட்ட பரிதாபம் கண்டு இரங்காத மனம் கூட ஒரு மனித மனமாகுமா? இத்தனை அவலங்களுக்கும் அடிப்படைக்காரணம்தான் என்ன?

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. சிவராஜா சாந்தக்குமார்*



மனித மனங்களில் அன்பு, இரக்கம், மனித நேயம் உண்மை, நேர்மை, நீதி, நியாயம் என்பவை அற்றுப் போனதுதான் இத்தனை அவலங்களுக்கும் அடிப்படைக் காரணமாகும். அன்பும் அறநெறியும் அற்றுப்போனதால் வாழ்க்கையின் அர்த்தமே மாறிவிட்டது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்ற வள்ளுவர் பெருந்தகையின் குறள் ஒன்றே இன்றைய கேள்விகளுக்குப் பதிலாகும். மனிதனை பூரண மனிதனாக்கி வாழவைப்பதுதான் மதம். எந்த மதமும் அதைத்தான் சொல்கிறது. செய்கிறது. அந்தவகையில் "அன்பே சிவம்" என்று ஆதி மூலநாயகனை அன்பு என்ற உருவில் காண்பதுதான் இந்து மதம். தன் உயிர் போல மற்ற உயிர்களையும் நேசிக்கும் பண்பு மனிதனுக்கு ஏற்படுமேயானால், உள்ளத்தில் உண்மை அன்பு பெருகுமேயானால் இன்று நாம் காணும் அவலங்கள் அடியோடு ஒழிந்துவிடும்.

முதலில் எம்மை நாமே அறிந்து கொள்ளவேண்டும். நமக்குள் எத்தகைய மனிதன், எத்தகைய மனம் ஒழிந்துகொண்டிருக்கிறது என்று தேடவேண்டும். எமது தவறுகளை உணரும்போது எம்மையே நாம் தண்டித்துக்கொள்கிறோம். எமது உணர்வுகள் எம்மைப் பாதிக்கின்றன. எமது உணர்வுகள் எமது உடல் நிலையையும், மன நிலையையும் மாற்றி, நம்மை வேறு மனிதனாக நிறுத்தி விடுகிறது. கெட்ட உணர்வுகள் மனதில் தேங்கும் போது, மனமும் கெட்டுக்கொண்டே போகிறது. நல்ல சிந்தனைகளும், இனிய செய்திகளும் மனதில் இருக்கும் போது எமது உடல் நிலையும், மனநிலையும் நல்ல நிலைக்கு மாறிவிடுகின்றது. நாம் படும் வேதனைகள் அனைத்துக்கும் காரணம் எமது மனதில் எழுகின்ற தீய உணர்வுகளே. ஆணவம், கவலை, கோபம் பயம் போன்ற உணர்வுகள் எம்மை வாட்டி வதைத்து விடுகின்றன. ஆகவே நற்சிந்தனைகளை நாடி, நல்ல உணர்வுகளை நம்மனதில் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

தனி மனித வாழ்விலும் சரி, உலக மட்டத்திலான அரசியல் வாழ்விலும் சரி, ஆணவமும் அரக்கத்தனமும் ஆட்சிபுரிவதால் நினைத்துப் பார்ப்பதற்கே நெஞ்சம் நடுங்கும் பேரழிவுகளை மனிதகுலம் அனுபவித்து வருவதே இன்றைய சரித்திரமாகிவிட்டது. அன்பும் அறனும் உடைத்தாயின் இத்துணை அவலங்கள், அலங்கோலங்கள் அரங்கேறுமா? மனிதகுலம் இன்று தேடவேண்டியது அன்பும் அறனும் அமைந்த அமைதியான வாழ்வையே. அந்த அமைதி வாழ்வின் ஊற்றுக்கள் ஆன்மீகம் என்ற பெரும்மலையில் அல்லவா உற்பத்தியாகின்றது.

சாகும் வரை ஆடுவதும், ஓடுவதும், வாடுவதும் என்று எமது வாழ்வை முடித்துக் கொள்ளாமல் அன்புருவான ஆண்டவனை நாம் தேடவேண்டும். இறைவன் சன்னிதானத்தில் திருத் தொண்டுகள் செய்யவேண்டும். அது ஊருக்காகவோ பெயருக்காகவோ பதவிக்காகவே இல்லாமல் உள்ளம் உருகி உண்மையான பக்தியோடு உள்ளன்போடு செய்யப்படுமானால் அன்புக்கடலான ஆண்டவனின் அருள் கிடைக்கும். ஒவ்வொரு உயிரிலும் அன்பு உருவில் ஆண்டவனைத் தேடவேண்டும். உண்மைப் பரம் பொருளைத் தேடவேண்டும். பேரின்பப் பெருவீட்டை அடைய அன்பும் அறமும் உடைய வாழ்வைத் தேடவேண்டும்.

"உன் எண்ணங்களில் நீ துரோகியாக இராதே. நற்சிந்தனையுடன் இரு. மனச்சாட்சியுடன் செயற்படு. இறுதியில் நீ வெற்றி காண்பாய். உண்மையாகவும், எளிய மனதுடனும் பிரார்த்தனை செய்தால் உன் பிரார்த்தனை கேட்கப்படும்" என்றார் சுவாமி இராமகிருஷ்ண பரம ஹம்சர்.

"சிந்தனை, வாக்கு, செயல் ஆகியவற்றில் உண்மையாயிரு. உனக்கு அருள் கிட்டியதை நீ உணர்வாய். பூமியிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் இறைவன் எப்போதும் அருள் செய்கின்றான். அதற்கு அஞ்ச வேண்டியதில்லை. நற்சிந்தனையோடு, தியானமும் செய்யப்பழகு. அவனது எல்லையில்லாக் கருணையை நீ உணர்வாய். இறைவன் நேர்மை, உண்மை, அன்பு ஆகியவற்றையே விரும்புகிறான். உதட்டளவில் செய்யப்படும் பிரார்த்தனைகள் அவன்வரை சென்று அவனைத் தொடுவதில்லை" என்றார் அன்னை சாரதாதேவி.



*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. ச. நந்தக்குமார்*

ஆகவே இம்மையிலும் மறுமையிலும் ஈடேற்றம் பெற, நாம் மதத்தை மையமாகக் கொண்ட இல்லறவாழ்வை அமைத்திடவேண்டும். எங்கள் பிள்ளைகளின் எண்ணங்களிலே ஆன்மீக, பண்பாட்டு விதைகளை இளமையிலே விதைத்து விடவேண்டும். நாம் வாழ்ந்து காட்டும் வாழ்வு எமது அடுத்த சந்ததியின் ஆரோக்கியமான வாழ்விற்கு அடித்தளமாக அமையவேண்டும்.

ஏதும் இல்லை என்றவர்க்கு என்ன இல்லை என்று வரும்
ஏக நாயகனைத் தேடு மனமே
தத்துவம் அறிந்தவரின் கூட்டுறவு கொண்டே
நற்சிந்தனைகள் தேடு மனமே
ஞான நிலை தோன்றிய பின் ஈன நிலை மாறிவிடும்
ஈசனடி தேடு மனமே
அந்தமில்லை, ஆதியில்லை, பந்தமில்லை என்றுநிற்கும்
அண்ணலடி தேடு மனமே
திருச்சிற்றம் பலம்

ஆக்கம் திரு. க. நடராஜா



*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. செல்லையா நாகேந்திரன்*

# Our Divine Mother

" Religion" is that which binds the soul back to God. It is the manifestation of the divinity that is in man. Religion is necessary for progress. Man needs spiritual consolation, solace and peace inspite of material prosperity. The trials and tribulations of life turn our attentions to God. Often we realize this very late in life but the truly blessed ones do so early.

The importance of religion is felt more than ever before and the solution for several problems of presents day lies only in the better understanding and practice of religion. In this respect, Hinduism is nothing but way of life. The goal of Hindu religion is not merely to make a man a better human consciousness. Hindu way of life is the integration of religion, philosophy and culture is empued with spiritual meaning and philosophy.



Hindu dharma accepts the existence of several Gods or deities. The worship of God in the form of Mother is a unique feature of Hinduism. Through the ages, the doctrine of the motherhood of God has established a firm root in Hinduism. Today Hindus worship the divine Mother in many popular forms such as durga, Kali, Lakshmi, sarswati, Ambika, and Uma. In Hinduism, Divine Mother is the manifestation of Divine Energy. Thus with the name of Divine Mother comes the idea of energy, omnipotence, omnipresence, love, intelligence, and wisdom.

Goddess Durga, also know as parvati or Lalitha is the wife Lord shiva and exists in various divine forms both friendly and fearful. Durga takes on the fearful form with great power and shakti (energy). It is the Goddess Durga that is most widely worshipped and it is she who most fully express the energy and complexity of shakti. Durga worshipers are the third most popular group within Hinduism, giving place only to the vishnu and shiva worshipers. Durga is represented with a stern expression, suitable to the unwering force that which drives the Universe. She is the first and foremost a slayer of demos, a goddness of warfare. Yet at the same time Durga is the all-merciful Mother who nourishes the Universe and bestows both material and spiritual wealth. Full of tenderness to those who turn to her, she is greatly beloved by her devotees.

Though God is everywhere, in every atom, the temple is considered a special place for worship. In Tamil the temple is termed " Alayam" or "Kovil" both meaning " Where souls reside" and "Do not live in any area where is no temple"

the temple can also be considered as an infinitely convex lens that which focuses God's grace on to the presiding deity of the temple. His grace emanates from the deity to us through all the abishekams, decoration of the deity, archnas, prayers, pujas, offerings, self-surrender and the other forms of worships offered by sincere devotees to the lord through the deity of temple. Prayer and worship are the only things to not only comfort and console us in times of sorrow and calamities but also to give us the courage to bear all the shocks and trials of life.

In this context, our Durkadevi Temple plays an important role in our life, it is like an oasis in desert. Everyone knows that Vanvouver is multicutural city, in such an atmosphere, we are able to promote and achieve ourselves spiritually, it is nothing but a divine gift.

**By Anusha Karunakran**

இந்தப் பக்கத்தின் தாளாளர் - தில்லை காலாலயம்

# பஜனை



இன்று சைவமக்களிடையே காணப்படும் வழிபாட்டு முறைகளிலே பஜனையும் ஒன்றாக திகழ்கிறது. ஆயினும் இப்பஜனை வழிபாடு பற்றிய தெளிவான விளக்கம் இன்னமும் புரியவைக்கப்படவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. எனவவே சைவ மக்களாகிய யாம் பஜனை என்றால் என்ன ? பஜனை செய்வதாற் கிட்டும் பலன் என்ன? என்பன பற்றிய வினாக்களுக்கு விடைகளை அறிவதோடு அவை பற்றிய விளக்கங்களையும் ஓரளவாயினும் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் இச்சிறு கட்டுரையை எழுதுகிறேன். இது பஜனை பற்றிய முழுமையான விளக்கமாக அமையாவிடினும் இனிமேலும் ஆராய்ந்து அறிய முற்படும் அன்பர்களுக்குத் தூண்டு கோலாக அமையுமென நம்புகிறேன்.

இறைவனை அடைவதற்கென கூறப்பட்டுள்ள மார்க்கங்கள் அதாவது வழிகள் வேதாகமங்கள் முதலாக சித்தாந்த வேதாந்த சாஸ்திரங்கள் ஈராகவும் புராண இதிகாசங்களிலும் தொகுத்தும் வகுத்தும், விரித்தும் பிரித்தும் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவை எல்லாம் சாமானியர்களான எம்மவர்களாலே கைக் கொள்ளக்கூடிய கைக் கொண்டு ஒழுகக் கூடிய இலகுவான நெறிகளாக இல்லை என்றே கூறலாம் ஆனால் மிக மிக எளிமையும் இலகுவும் இனிமையுமான வழிபாடு தேவ நாம சங்கீர்த்தனம் என்றழைக்கப்படும் பஜனை வழிபாடு ஒன்றேயாகும்.

முத்திநெறி விரும்பும் மக்களும் சரி சாமானியர்களும் சரி எல்லோரும் ஒன்று கூடி இறைவனின் நாமங்களையும், பெருமைகைளையும் புகழ்ந்துபாடி, மகிழ்ந்து, கசிந்துருகி வழிபடுதலே பஜனையாகும்.

இறைவன் அருட்கொடைவள்ளல், அடியார்க்கு எளியவன், கருணாமூர்த்தி, அத்தகைய இறைனின் சிறப்புக்களையும் திருநாமங்களையும் மெய்யன்போடு ஒன்று கூடிப்பாடி வழிபடுதல், கூவிஅழைத்தால் குலையிரத்தல், வேண்டுதல் செய்தலே பஜனை எனப்படுகிறது. கிராமங்களில இதனைக் கூட்டுப்பிராத்தனை என்ற பெயராலே அழைக்கின்றார்கள். "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்று மாணிக்கவாசக சுவாமிகள் எளி வந்த தன்மையினை, அதன் இரகசியத்தை எடுத்துக் கூறியதோடு முக்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப் பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்த மலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கு அருளிய ஆறு ( ஆறு என்றால் வழி ) எது என்பதையும் விளக்குகின்றார்.( அச்சோப் பதிகம் - 01 ) இதன் விளக்கத்தை பயனைத் திருஞானசம்பந்தப் பெருமானும் பாடத் தவறவில்லை, விரதங்கள்

" வீடும் ஞானமும் வேண்டதிரேல் விரதங்களால்
வாடி ஞானம் என்னாவதும் எந்தை வலஞ்சுழி
நாடி ஞான சம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை
பாடும் ஞானம் வல்லார் அடி சேர்வது ஞானமே "

எனப் பாடுகின்றார் ஆம் நோன்புகளை நோற்று, அவற்றால் உடம்பை வாட்டி வருத்துவதிலும்

தொகுப்பு: ஆர்.வீ. கந்தசாமி (யாழப்பாணம்)

இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. கணபதிப்பிள்ளை கிருபாகரன்

# குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகள்



## ஐ. நா. சபையின் சமாதானப் பரிசு பெற்றார்

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயளாளர் நாயகம் உயர் திரு. ஊத்தான் அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் வழங்கப்படும் பரிசு இவ்வருடம் உலகெங்கும் இந்து சமயத்தின் ஆன்மீகக் கருத்துக்களை அழகுறப் பரப்விவரும் ஹாவாய் சைவ ஆதீன குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிக்கு வழங்கப்ட்டது. நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி மேற்படி சமாதானப் பரிசு வழங்கும் வைபவம் நடைபெற்றது. இவ் விழாவில் கலந்து கொண்ட பல அரசியல் தலைவர்களும் சமயத் தலைவர்களும் கடந்த 50 வருடங்களாக குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் உலக சாமாதானத்திற்கு ஆற்றிவரும் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினார்கள் இந்த வைபவத்தைத் தொடர்ந்து ஆகஸ்ட் 28ம் திகதி முதல் 29ம் திகதி வரை ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மகாநாட்டிலும் குருதேவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கடந்த வருடங்களில் இந்த உலக சாமாதானப்பரிசு முன்னாள் ரஷ்ய ஜனாபதி கோர்பசோவ், அன்னை திரேசா, முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, வண. தலைலாமா, வண. போப் ஜோன் போல், வண. டெஸ்மன்ருரோ ஆகியோருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்று உலகெங்கும் இந்து சமயத்தின் ஆன்மீகக் கருத்துக்களையும் இந்து கலாச்சாரத்தையும் பரப்பி வரும் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் யாழ்பாணத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகளின் பிரதம சீடராவர். சமாதானப் பரிசு பெற்று பின் ஹவாயில் இருக்கும் தனது சைவ ஆதீனதத்துக்கு திரும்பும் வழியில் குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகளுக்கு நியு ஜேர்சி, சிக்காகோ, ரென்னசி, கலிபோர்னியா ஆகிய இடங்களில் சிறப்பான வரவேற்பு விழாக்கள் அந்த இடங்களில் வாழும் அடியவர்களால் அளிக்கப்பட்டன.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - செல்வி. மஜேலா இமானுவல்*

# கடவுளும் மனிதனும்

கவி படைக்கும் நாவொன்று
அருள் வேண்டி துதி படைத்து நின்றது.

மனிதன்: சதை படர்ந்த நாவாலே கவி படைக்க வந்தேன் யான் அருள் படைத்த நாயகனே, என் துயர் துடைக்க வருவீரோ?

கடவுள் : கதி படைத்த மானிடனே, உன் துதி கூட கவி தானே மதி தனில் கவனம் வைத்து உயிர் கொண்டு வடித்து விட்டால் கல் கூடச் சிலைதானே நிஜம் தன்னை தானறிந்து, நெறி கொண்டு வாழ்ந்துவிடு உன்னுள்ளே நானிருக்க உன்னுயிரை எனக்களித்து எனக்குயிர் தந்திடுவாய்

மனிதன்: ஐயகோ ! ஆண்டவனே, எனக்குயிர் அளித்தவனே என்னைத் தாய் சுமக்க என் தாயவளை நீர் சுமந்தீர் செல்லப்பராயத்திலும் துள்ளிய தில்லைப் பருவத்திலும் காத்திட்டீர் பன்னைப் படுக்கை பட்டு பரலோகம் செல்லும் வரை என்னைக் காத்திடும் இணல்வீசா எனக்குயிர் அளி என்று வேண்டினீரே, என்னுயிரை வேண்டினீரே!

கடவுள்: ஆற்றல் கொண்ட மானிடனே ஆண்டவன் யான் அருகிலேன்று அறிவிழந்து பேசாதே இவ்வுலகை யான் படைத்து, இணையில்லா உயிராக உன்னைப்படைத்தேன். அன்பெனும் கொடிவளர்த்து, பாசமெனும் பந்தல் போட்டு, நேசம் கொண்ட உன் வாழ்வின் நிழலில் யான் தங்கிடவே ஏற்ற ஓரிடம் கேட்டேன்.

மனிதன்: ஆற்றலில் வேற்றுமையோ ஆண்டவனே! மாற்றாரும் வேற்றாரும் மதி மயங்கி நின்றபோது ஊற்றாகி என்னுள்ளே் ஊறியவா சேற்றான என்னுள்ளே செடி ஒன்றை ஊன்றி விட்டு பூத்தபின் பூப்பறிக்க வாவென்றால் ஏற்றதோ? சேற்றுக்கு பெருமை தரும் தாமரையே ஆற்ரோட்டத்துக் அலையேது ஐயா?

கடவுள்: சிந்தையின் சிகரமே! தாயுன்னை மடியில் வைத்திருந்தாலம் அவள் உன் குடியில் வாழ்வதில்லையோ! காற்றோட்டத்தில் அலைதிரண்டாலும் நீரில் பிழை ஏதும் வருவதுண்டோ! போற்றிய தேவாரத்தின் பொருள் யான் என்றாலும் ஆக்கியவன் அப்பன் அன்றே! ஏற்றிய விளக்கின் ஒளி நான் என்றாலும் ஏற்றியவன் நீயன்றோ!

மனிதன்: உத்தமனே! சத்தியனே இறைவா ஐயன் உணர்விழந்து பேசிவிட்டேன் ஐயன் உன் நாமத்தை அனுதினமும் பூசித்தேன் அறிவிற்கு கயிறு போட்டு அதிலிருந்து உறி கட்டிவைத்திருந்தேன். உயிருக்குள் உருகிவிட தவறிவிட்டேன். நீருரைத்த அருள் மொழியை செவியுறவே உள் வாங்கி உறைய வைத்தேன். நித்தமும் என்னைக் கடைந்து ஞானம் எனும் நெய் எடுத்து இறைவா உன் ஒளிச் சுடரை ஏற்றிவிடுவேன்.

கடவுள்: சீர் பெற்று வாழ்க

ஆக்கம்: கணபதிப்பிள்ளை கிருபாகரன்

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - செல்வி. சிந்து இராஜதுரை*

# சைவ சமயத்தில் பசுவின் சிறப்பு

எமக்கு தெரிந்த உலகம் இந்த பூமிப் பந்து தான். ஆனால் இதைவிடவும் பல உலகங்கள் உண்டு. அதே போல நாங்கள் பார்க்கின்ற வாழ்வும் இந்த பூமியில் நாம் வாழும் காலம் தான். இதற்கு மேலும் வாழ்வு இருக்கிறது. அதையும் நாம் அறியா மல் உள்ளோம். அருள் சேர்ந்த நெஞ்சு உடையவர்கள் இறைசிந்தனையில் வாழ்பவர்கள் ஆவார்கள். மற்றவர்கள் எல்லோரும் இருள் வாழ்வு வாழ்கின்றவர்கள். இருள்வாழ்வு வாழ்கின்றவர்கள் இருள் உலகம் போவார்கள்.

"அருள் சேர்ந்த நெஞ்சினாற்கில்லை
இருள் சேர்ந்த இன்னாவுலகம் புகல"

என்றார் வள்ளுவர்.

அருளாளர்கள் வாழ்கின்ற வாழ்வை "யக்ஞமயம;" என்று சொல்லுவார்கள் யக்ஞமயம் என்றால் பசுவாழ்க்கை என்று பொ ருள். பசு தான் வாழும் காலத்தில் பிறருக்கு செய்யும் சேவை அளப்பரியது. இதனால் பசு சிறப்பானதொரு மிருகம் இதனால் தான் மணிவாசகர் "விடைப்பாகா" என்று இறைவனைப்பாடுகின்றார். விடை என்றால் எருது என்று பொருள். பாகா என்றாள் எருதை தனது பாகமாக வைத்தவன் என்று பொருள் விடைப்பாகன் என்பதற்கு சிலர் யானைப்பாகன் போல் எருதுப்பாகன் என்று என்னுகிறார்களா. அது பிழை. அம்பிகையை பாகமாக உடையவன் விடைப்பாகன் என்று ஆகியிருக்கிறது.

பசுவின் உடலில் புனித தீர்த்தங்களான கங்கை, காவேரி, துங்க பத்திரை, வட பெண்ணை, தென் பெண்ணை, பிரமபுத்தி ரை, வையை ஆறு, தாமிரபரணி முதலியன பொருந்தியிருக்கின்றன.அத்துடன் தேவர்கள் சிவகணங்கள் முனிவர்கள் என் பவர் கள் விரும்பி உறைகின்றனர் இதனால் பசுவை கோமாதா என்கிறோம். பசுவின் சிறப்பை சண்டேஸ்வர நாயனார் புராணம்

"தங்கும் அகில யோனிகட்கும்
மேலாம் பெருமைத் தகைமையென
பொங்கும் புனித தீர்த்தங்கள்
எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர்
கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தாமுடைய
அல்ல வோநல் ஆனினங்கள;"

என்று சொல்வதால் நன்கு விளங்கும்.



பசுவின் பாலினால் இறைவனை அபிடேகம் செய்வித்தால் இறைவன் மகிழ்வான். இதைத் தான் தெய்வச்சேக்கிழார்:

"ஆய சிறப்பி னாற் பெற்ற
அன்றே மன்னுள் நடம்புரியும்
நாயனார்க்கு வளர்மதியும் நதியும்
நகு வெண் டலைத் தொடையும்
மேய வேணித் திருமுடி மேல்
விரும்பி ஆடி அருளுதற்கு
தூய திருமஞ்சனம் ஐற்தும்
அள்க்கும் உரிமைச் சுரபிகள் தாம"

என்று போற்றினார் சேக்கிழாார் பெருமான் பசு தரும் பால், தயிர். நெய், கோசலம், கோமயம்

ஆகிய ஐந்தையும் திருமஞ்சனம் என்று சொல்லாமல் “தூய மஞ்சனம்” என்று அடைகொடுத்திருப்பது சிந்தனைக்குரியது.

இவ்வவளவு சிறப்பு மிக்க பசுவை கொல்வது பாவம். பசு தரும் சாணத்தில் இருந்து திருநீறு தயாரிக்கின்றோம். அந்த திருநீற்றின் மகிமையே பெரிது. சிவன் அணியும் திருநீற்றை தரும் பசு ஒரு மூர்தம் என்று சேக்கிழார் போற்றினார்.

-மலேசியாவிலே நடந்த அகில உலக இந்து சமய மாநாட்டிலே ஆத்ம ஜோதி நா. முத்தையா பசுவதையை முன்வைத்து பேசினார். அவர் பேசியது என்னவென்றால் ஒரு பசு வாழ்வதால் ஆயிரம் பேருக்கு பால் தரும் அதனைத் கொன்று தின்றால் இருபத்தைந்து பேருக்கு உணவாகும். இந்து சமய நோக்கில் இல்லாவிட்டாலும் பொருளாதார நோக்கிலாவது பசுக் கொலையை நிறுத்த வேண்டும்.

மேற்காட்டிய பேச்சு புலம்பெயர்ந்து வந்து மேல் நாடுகளில் வாழும் beef உண்ணும் நம்மவர்களுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கா? அல்லது கிருஸ்ணபரமாத்மா ஊதிய பாஞ்சன்னியமா?

நாம் இறந்த பின் சொர்கக்கத்ததிற்கும் நரகத்திற்கும் இடையில் உள்ள ஆறு ஆன வைதரணியை கடப்பதற்க்கு பசுதான் உதவுகிறதாக சாத்திரம் உண்டு.

யாழ்ப்பாணத்திலே ஞானப்பிரகாசர் என்று ஒரு முனிவர் இருந்தவர். இவர்காலத்தில் ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் அங்கு வாழ்ந்த சைவர்களிடம் ஒருநாளைக்கு ஒருவராக பசுக்கன்று தர வேண்டும் என்று சொல்லி வாங்கி தினம் தினம் உண்டு வந்தனர். அப்பொழுது ஞானப்பிரகாச முனிவருக்கும் ஒல்லாந்தர்களுக்கு பசுக்கன்று கொடுக்கும் தவணை வந்தது. ஞானப்பிரகாசர் ஒருத்தருக்கும் சொல்லிக்கொல்லாமல் இந்தியா ஓடி வந்து விட்டார். அவர் இந்தியாவிலே சிதம்பரத்திலே தங்கி தமிழ் கற்று சிவஞான சித்தியாருக்குகு நல்லதோர் உரை செய்தார். அவர் வெட்டிய குளம் ஒன்றும் இன்றும் “ஞானப்பிரகாசர் குளம்” என்று அழைக்கப்பட்டு வருகிறது.

இந்தளவுக்கு ஈழத்தவர்கள் பசுவதையை கண்டித்தவர்கள். அவர்கள் வழிவந்த நாங்கள் பசு இறைச்சியை புசிக்கலாமா? நாம் beef ஒழிப்போம். சைவத்தமிழராக வாழ்வோம்.

-வடிவேலு ஞானகாந்தன்.-



*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. கந்தைதணிகயா பாலசுப்பிரமணியம்*

# நம்மையும் பாடினார் சுந்தரர்

மலை நாட்டிலே செங்குன்றூரிலே வேளாளர் குலத்திலே, பரமசிவனுடைய திருவடிகளை மனதில் இருத்தி உட்பற்று புறப்பற்றுக்களை அறுத்தவரும், அடியார்பத்தியிலே உயர்வொப்பில்லாதவருமாகிய விறன்மின்டநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவத்தலங்களுக்கு போனபோதெல்லாம், முன் அடியார் திருக்கூட்டங்களுக்கு எதிரே போய் அவர்களை வணங்கிக் கொண்ட பின் சிவபெருமானை வணங்குகின்றவர்.

திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் அடியார்கள் எவ்லோரும் கூடியிருக்கின்ற சமயத்தில் சுந்தரர் சுவாமி தரிசனம் செய்ய வந்தார். அடியார்கள் முன்னிலையில் சிறியவனாகிய தான் எதிரே செல்லக் கூடா தென்று நினைந்து இந்த அடியார்களுக்கெல்லாம் அடியானாகும் பேறு எப்பொழுது கிடைக்குமோ என்று ஏங்ககியவராய் சென்றார். சுந்தரர் "அடியார்களை வணங்காமற் செல்வதைக் கண்ட விறன்மிண்டர். அடியார் களை வணங்காமற் செல்கின்ற வன்றொன்டன் அவ்வடியார்களுக்குப்புறகு: அவனை வலிய ஆட் கொண்ட பரமசிவனும் புறகு" என்றார் விறன்மிண்டருடைய அடியார் பக்தியின் உறைப்பைக் கண்ட சுந்தரர் இந்த அடியார்களுக்கெல்லாம் அடியானாகும் நாள் எந்நாளோ என்று நினைத்துக் கொண்டு சுவாமி தரிசனம் செய்வதற்கு திருக்கோயினுள்ளே போனார். அப்பொழுது அடியார்க்கு அடியானாக வேண்டுமென்று அவர் விரும்பிய வரத்தை கொடுக்கும் பொருட்டு சுவாமி அருக்கு காட்சி கொடுத்தருளி நீர் உம்மு டைய அடியார்களை வணங்கி அவர்கள் மேலே பதிகம் பாடு என்று அருளிச் செய்தார்.

சுந்தரர் பதைபதைத்து சுவாமி அடியார்களைப்பற்றி எதுவுமே அறியாத யான் எப்படி பாடுவேன் என்று பிரார்த்திக்க எம்பெருமானால் "தில்லை வாழந்தணர் தமடியார்கு மடியேன" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினார்.அது கண்டு சுந்தர மூர்த்தி நாயனார் புறப்பட்டு தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார். அடியார் திருக்கூட்டத்தை பல முறை வணங்கினார். வந்த அடியார்கள் யாவர்க்கும் வெவ் வேறாக அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகம் பாடி அவர்களை வணங்கினார்.

இதைக்கண்ணுற்ற விறண்மிண்ட நாயனார் மனம் மிக மகிழ்ந்து இவ்வண்றொண்டருடைய மனம் அடியாரிடத்திலே பதிந்திருக்கின்றது. என்று அருளிச்செய்தார்.

அறுபத்துமூன்று அடியார்களை வைத்துத் திருத்தொண்டத்தொகை பாடிய சுந்தரர் ஒன்பது தொகை யடியார்களையும் பாடியுள்ளார். உலகில் எத்தனையோ பெரிய மகான்கள் இருக்கிறார்கள் மகான்கள் இருந்தி ருக்கிறார்கள் இன்னும் இருக்கப்போகிறார்கள். அவர்கள் யாரென்று எமக்கு தெரியாது. அறுபத்து மூவர் உற்சவமென்று பல கோயில்களில் உற்சவங்கள் நடைபெறுகின்றன. இப்படி உற்சவங்கள் பண்ணுவதனால் தான் அவர்களுடைய நினைப்பு நமக்கு வருகின்றது. அவர்கள் நினைப்பு வரும்படியாக உற்சவம் பண் ணும் போது கெட்ட குணம் எல்லாம் ஒரு கணப்பொழுதாயினும் மாறுகின்றன. அவர்கள் எல்லாம் நல்ல குணங்களின் உச்ச நிலையை அடைந்தவர்கள். ஆகையால் அவர்களை நினைக்கிற சமயத்திலாவது கொஞ்சம் சாந்தம் ஏற்படுகின்றது அந்த ஒரு கணம் இருந்தால் போதும்.

சம்பிரதாய பூர்வமாக நாயன்மார்கள் அறுபத்துமூன்று பேர் என்று சைவர்களும் ஆழ்வார்கள் பன்னிருவர் என்று வை'ணவர்களும் வைத்திருக்கின்றார்கள் ஆனால் பலர் தோன்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள். அப்படிதோன்றாவிட்டால் சமயத்தின் வளர்ச்சியையோ அன்றிப் பக்தியீன் வளர்ச்சியையோ நாம் எப்படித்தான் அறிந்து கொள்வது?

தொகை அடியார்கள் என்று ஒன்பது திருக்கூட்டத்தினரைச் சுந்தரரே குறிப்பிட்டுள்ளார். திருத்தொண்டத்தொகை பாடுவதற்கு அடிஎடுத்துக் கொடுத்த சிவபெருமான் முதலில் தொகைஅடியாரில் ஒருகூட்டத்தின் பெயராகிய "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்ற பெயரையே எடுத் துக் கொடுத்திருக்கின்றார். இந்தமாதிரிக் குணம் உடையவர்கள் இந்த மாதிரி அனுட்டானம்உடையவர்கள் இவர்கள் எல்லாம் ஒரு கூட்டம்.

தில்லைவாழ் அந்தணர்கள், பொய்யடிமை இல்லாத புலவர், பத்திராய்ப்பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தை சிவன்பாலே வைத்தார். திருவாரூர்ப் பிறந்தார், முப்பொழுதும் திருமேனி தீண்டுவார், முழுதிரு நீறு பூசியமுனிவர், அப்பாலும் அடிசார்ந்தார்ஆகிய இந்த ஒன்பது கூட்டத்தினரும் தொகையடியார்கள் ஆவர்.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. கனகரத்தினம் தவக்குமாரன்*



அப்பாலும் அடிசார்ந்தார் என்றொரு கூட்டத்தினரைச் சுந்தரர் குற்ப்பிட்டிருக்கிறாரே அக்கூட்டத்தில் நாமும் அடங்குகின்றோம். அப்பாலும் என்றால் தமிழ்த் தேசத்தில் மாத்திரம் அல்ல தமிழ்த் தேசத்துக்கு அப்பால் மகான் ஒருவரும் இல்லையென்று சொல்ல முடியுமா? இப்படி அறுபத்து மூன்று நாயன்மார்கள் என்று கணக்கு சொன்னால், ஒருவரை கடைசி என்று வைத்துக் கொள்கிறோம். சுந்தரரின் அன்னையா ராகிய இசையானியர் தாம் முடிவானவர் என்று நாம் வைத்துக்கொள்ளலாம். அப்படி முடிப்பது ஒருகாலத் தோடு முடிகின்றது. அது ஆயிரம் வருடத்திற்கு முந்தியது என்றால் அதற்க்கு பிந்தியும் யாரும் மகான்கள் இருந்திருக்க மாட்டார்களா?

அறுபத்துமுன்று நாயன்மார்களும் தமிழ்த் தேசத்தில் இருந்தவர்கள். தமிழ்த் தேசத்திற்கு அப்பாலே உள்ள நாடுகளில் சிவபூசை இல்லையா?சிவபக்தர்கள் இருந்திருக்க மாட்டார்களா?பத்திரிகேதாரம், மகா காளம்,உஜ்ஜையினி,சோமநாதம்,காசி,ஸ்ரீசைலம்,இப்படி நிறைய சிவத்தலங்கள் இந்தியாவிலே இருக்கின்றன. கடல் கடந்த நாடுகளில் எல்லாம் சிவ வழிபாடு இருந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இங்கெல்லாம் மகான்கள் இல்லாமலா சிவசேத்திரங்கள் இருந்திருக்கும்?

இந்தோனேசிய இராச்சியத்தின் தலை நகராகிய ஜகார்த்தாவில் இருக்கும் நூதனசாலையில் வைக்கப்பட் டிருக்கும் அகழ்வாராய்ச்சிப் பொருட்களில் தொண்ணூறு வீதமானவை சைவசமய சின்னங்களாகவே கா ணப்படுகின்றன. இன்னும் ரஷ்யா, அமெரிக்கா, சூடான் இங்கெல்லாம் கூடச்சிவலிங்கங்கள் இருந்திருக்கின்றன. என்று சமீபத்தில் ஆராய்ச்சியாளர் ஒருவர் பத்திரிகையில் எழுதியிருக்கின்றார். சிவன்கோயில் என்ற பெயருடைய இடமொன்று கனடாவில் இருப்பதாக தற்போது கண்டுபிடித்திருக்கின்றார்கள். இப்படிச் சிவ லிங்கங்களும் சிவன்கோயில்களும் சிவபூஜையும் ஒரு காலத்தில் உலகமெல்லாம் இருந்திருக்கின்றன.

மற்றைய சமயங்கள் தோன்றுவதற்கு முன்பே உலகத்திலுள்ள சர்வஜனங்களும் சிவபக்தர்களாக சிவ பூஜை பண்ணிக்கொண்டு இருந்தார்கள் என்று தெரிகிறது.இப்படி தமிழ்த் தேசத்திற்கும் அப்பாலே அனேக பக்தர்கள் மகான்கள் இருந்திருக்கலாமே அவர்களை எல்லாம் சேர்க்காமல் விட்டால் அபசாரம் ஆகும் அல்லவா? ஆகவே "அப்பாலும் அடிசார்ந்தார்" என்று அவர்களை சேர்த்துக்கொண்டார்கள்.

சரித்திரத்தில் தெரிந்தவர்களைத் திருத்தொண்டர்கள் என்று சேக்கிழார் பெரிய புராணம் பாடினார். இவர்கள் எந்நாட்டில் இருந்திருக்கின்றார்களோ அதற்கு அப்பால் உள்ள நாடுகளிலும் அடியார்ககள் இருந்திருக்கிறார்கள்: இருக்கின்றார்கள் பக்திக்கு நாட்டுக்கணக்கு கிடையாது: இட எல்லைக் கணக்கு கிடையாது. இந்தத் தேசத்துக்கு அப்பாலும் மகான்கள் அந்தக் காலத்திலும் இருந்திருப்பார்கள். இந்தக் காலத்திலும் இருப்பார்கள் பின்னாடியும் வரலாம் அவர்கள் அருந்தகாலத்திற்கும் அப்பால் என்றும ்தெரிந்து கொள்ள வேண்டும். காலவரையறைக்கும் அப்பால்,தேசஎல்லைக்கும் அப்பால் இருக்கும் எல்லா மகான்களையும் சேர்த்து ஒரு கூட்டமாக "அப்பாலும் அடிசசார்ந்தா" என்று குறிப்பிட்டார்.

மனம் உருகிக் கசிந்து உன்னைத்தவிர வேறு யாரையுமே நினைக்காமல், பக்திபண்ணுவதைத் தவிர வேறு காரியமே இல்லாமல், உண்மைப் பொருள் நீதானென்று பக்தி பண்ணினவர்கள் எத்தனை பேர் இருப்பார்களோ? அவர்கள் பேர் இன்னது சுயரூபம் இன்னது என்றெல்லாம் தெரியாமலே இருக்கும். அப்படி ஊர்பேர் தெரியாதவர்கள் எத்தனை பேர்களோ? அத்தனை பேர்களுக்கும் நமஸ்காரம் செய்கிறேன் என்று தியாகையரவர்கள் கூறுகின்றார்கள்.

எத்தனையோ பேர்கள் இருந்தாலும் இறைவன் திருவருளைப் பெற்ற சுந்தரரது வாக்கிலே வந்தவர்கள் அறுபத்து மூன்று தனியடியார்களும் ஒன்பது தொகையடியார்களுமே. அவர்களுக்கு தனி ஒரு மதிப்பு. பெரிய புராணக் காவியத் தலைவனாக சுந்தரரையே சேக்கிழார் பாடுகின்றார். சுந்தரருடைய சரிதத்துடன் ஆரம்பிக்கும் பொயபுராணம் சுந்தரருடைய திருக்கயிலாய யாத்திரையுடன் நிறைவுறுகின்றது. உலகெலாம் என்று ஆரம்பிக்கும் பெரியபுராணம் உலாகெலாம் என்று முடிவுறுகின்றது.

அப்பாலும் அடிசார்ந்தார் அடியோர்க்கும் அடியேன் என்று பாடிய அடியில் நாமும் அடங்குகின்றோம் என்பதை நினைக்கும் போது நாமும் பாக்கியம் செய்துள்ளோம் என்பது பெறப்படுகின்றது.

-ஆத்மஜோதி நா. முத்தையா-

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. சதாசிவம் சிவக்குமாரன்*

# அன்புடையார் எல்லாம் உடையார்



இவ்வுலகில் வாழும் பல்லாயிரக்கணக்கான உயிர்களில் மனிதனும் ஓர் உயிர். அவற்றுள் பல, தாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவைத் தேடுவதிலும் உண்பதிலும் பெரும்பாலான நேரத்தைச் செலவழிக்கின்றன. பெரும்பாலான விலங்குகளுக்கு அன்பு, பாசம் போன்றவை மிகக் குறைவு. எனவே இரை தேடும்போதோ அல்லது இனவிருத்திக்கோ இடையூறு நேர்ந்தால் தங்களது இனத்துடன் மூர்க்கத்தனமாகச் சண்டையிடுவதற்கும் அவை தயங்குவதில்லை. தமக்குத் தேவையான உணவைப் பெறுவதற்குத் தம் தாயோ, தந்தையோ, மகளோ, மகனோ, அக்காளோ, தம்பியோ, தம் இனத்தவரோ அல்லது இதர உயிர்களோ தடையாக இருந்தாலும் அவற்றைச் சண்டையிட்டுத் தகர்ப்பதற்கு அவை தயங்குவதுமில்லை. அதற்காக அவை வருத்தப்படுவதுமில்லை. இதற்குக் காரணம் விலங்குகளுக்கு இருப்பது ஐந்தறிவுதான். மனிதன் மட்டுமே இவற்றில் இருந்து வேறுபட்டு ஆறாம் அறிவாம் பகுத்தறிவைப் பெற்றுள்ளான்.

பகுத்தறிவைப் பெற்ற மனிதன் அதைப் பயன்படுத்தும் விதத்தில்தான் விலங்குகளிலிருந்து வேறுபடுகிறான். எதையும் ஆராயாமல் அடுத்தவரிடம் பகைமை பாராட்டும் மனிதன், அடுத்தவரிடம் பொறாமைப்படும் மனிதன், அடுத்தவருக்கு கொடுமையிழைக்கும் மனிதன், மற்றவரை அடிமைப்படுத்த நினைக்கும் மனிதன் விலங்கினும் கீழானவனே. மேலும் மனிதன் மட்டுமே தான் செய்யும் காரியத்தினால் நிகழும் தவறுகளை உணரக்கூடிய நிலையையும், உணர்ந்து வருந்தும் பக்குவத்தையும் பெற்றுள்ளான். ஆனாலும் பல நேரங்களில் மனிதனும் தன் தவறை உணர்வதில்லை. அல்லது உணர்வதற்குரிய மனப் பக்குவத்தை அடைவதில்லை.

இவ்வாறு மனப்பக்குமற்ற மனிதனை நல்வழிப்படுத்தி, எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தச் செய்யவே முற்காலத்தில் பல மகான்கள், ஞானிகள், அறிஞர்கள் முதலியோர் தோன்றினர். அவர்களது அறிவுரைகளைக் கேட்டு அவர்கள் வழி நடந்த மக்கள் தாங்கள் ஒரு அமைப்பாகச் செயல்பட ஆரம்பித்தனர். இவ்வாறு செயல்பட்ட அமைப்புக்கள், மதங்கள் என்றழைக்கப்பட்டன. இவற்றுள் தொன்மையானது என்று சொல்லப்படுவது இந்து மதம் ஆகும். மேலும் இன்று இதுபோல் புத்த மதம், ஜைன மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம், சீக்கிய மதம் போன்ற பல மதங்களும், அவற்றைப் பின்பற்றுவோர் பலரும் உள்ளனர்.

மனிதனை எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தச் செய்யவும், நல்வழிப் படுத்தவுமே மதம் தோன்றியதென்றால், ஏன் பல மதங்கள் தோன்ற வேண்டும்? ஒரு மதம் போதாதா? என் புற்றீசல்போல் பல மதங்கள் உருவாகின? அவையும், ஏன் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வழிமுறைகளைப் பின்பற்றச் சொல்கின்றன? ஒரு மதத்தின் வழி முறைகளைப் பின்பற்றும் மனிதன் அடுத்த மதத்தின் வழிமுறைக்கோ அல்லது அந்த மதத்திற்கோ எதிரியா? அல்லது ஒரு குறிப்பிட்ட மதத்தின் வழிமுறைகளைப் பின்பற்றும் மனிதன் மற்றொரு மதத்தில் உள்ள வேறு பல நல்ல போதனைகளைக் கடைபிடிக்கும் வாய்ப்பை தவற விட்டவனாகிறானா?

இதுபோன்ற பல கேள்விகளுக்கு விடையிருக்க நாம் ஒரு சில உதாரணங்களை வைத்து விளக்கம் காண்போம். மரம் ஒன்று ஒரு காட்டில் உள்ளது. அதன் பயன் கருதி அம்மரம் வெட்டப்பட்டு பல துண்டுகளாக்கப்படுகிறது. இவற்றுள் ஒரு துண்டை தச்சன் ஒருவன் எடுத்து ஒரு அழகான

மரச்சிலை செய்கிறான், நாய் உருவத்தில். வேறு ஒரு துண்டு மேலும் பிளக்கப்பட்டு விறகாக உபயோகிக்கப்படுகிறது. மற்றொரு துண்டு பலகைகளாக அறுக்கப்பட்டு வீடு கட்டவோ, வீட்டுச் சாமான்கள் செய்யவோ பயன்படுத்தப் படுகிறது. இதில் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இப்பல வகையான பொருட்களுக்கு எல்லாம் மூல காரணம் அந்த மரம்தான். ஆனால் அது நாயாகவோ, விறகாகவோ, வீடாகவோ மாற்றமடைந்த பின் அதை மரமாய் யாரும் பார்ப்பதில்லை. அதுபோலத்தான் பல்வேறு வகையான மதங்களும். மதங்களுக்கும், மரப்பொருட்களைப் போலவே, உருவாவதற்கு ஒரு மூலப் பொருள்தான், ஒரு மூல காரணம்தான் என்றாலும் உருவாக்கியவரைப் பொருத்து பல பெயர்கள் பெற்றுள்ளன. எனவே எம்மதமாய் இருந்தாலும் அவை மனிதனை நல்வழிப்படுத்த உருவானவையே என அறிந்து கொள்ளல் அவசியம்.

இன்றைய உலகு மனிதன் இனத்தால், மதத்தால், மொழியால், நாட்டால், கலாச்சாரத்தால் வேறுபட்டு இருக்கின்றான். இதனால் பல மனக் கசப்புகளும், போட்டிகளும், பொறாமைகளும் இவர்கட்குள்ளே ஏற்பட்டுள்ளன. இதைத் தவிர்க்கும் வழி என்ன? எந்த ஒரு மனிதனும் பிறக்கும் போதே இவ்வேறுபாடுகளை அறிந்து பிறப்பதில்லை. அவன் வளரும்போது அவன் இந்த மொழி, மதம், இனம் போன்றவற்றைச் சேர்ந்தவனென மற்றவர்களால் அடையாளம் காட்டப்படுகின்றான். தம் மொழி, இனம், மதம் பற்றி ஒருவன் பெருமை கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. பெருமை கொள்ளவும் வேண்டும். ஆனால் எங்கே தவறு நிகழுகிறதென்றால், இன்னொரு மதம், இனம், மொழியாளரைவிட தான் உயர்ந்தவன் என்னும் தற்பெருமை கொள்ளும் போதுதான் மனிதன் தவறிழைத்தவனாகிறான். நாம் முன்பே கண்டபடி எந்தவொரு மதமோ, மொழியோ, இனமோ தீய வழியில் செல்ல யாரையும் சொல்வதில்லை. அவை பின்பற்றும் வழி முறைகள் வேறு வேறாக இருந்தாலும், அடையும் இடம் ஒன்றுதான். எனவே குறிக்கோள் ஒன்றுதான் என்னும் உண்மையை உணர்ந்தால் நம்மிடையே உள்ள வேறுபாடுகளை யாரும் பெரிதுபடுத்த மாட்டார்கள். பெரிதுபடுத்தவும் தேவையில்லை.

இவ்வுலகில் நாம் எல்லோரும் அமைதியாக வாழ பின் வரும் வழிமுறைகளைப் பின்பற்றுதல் அவசியம் என அறிஞர்கள் வழியுறுத்தியுள்ளனர்.
உனக்கு எது தீங்கு என்று நினைக்கின்றாயோ அதை நீ மற்றவர்கட்குச் செய்யாதே.
நீ எதன் மேல் பற்று வைத்துள்ளாயோ அதன்மேல் மற்றவர்களும் பற்று வைத்திருப்பர் என அறிந்து கொள்.
நீ எதை அடைய நினைக்கின்றாயோ அதை மற்றவர்களும் அடைய நினைப்பர் என்பதை உணர்ந்து அவர்களுக்கும் வழி விடு.
நீ சொல்வதை மற்றவர்கள் கேட்டு நடக்க வேண்டுமென நீ நினைத்தால் இதே எண்ணத்தை மற்றவர்களும் உன் மேல் திணிப்பர் என்பதை மனதில் கொள்.
உனக்கு உன் தாய், தந்தை, மொழி, இனம், மதம், நாடு எப்படி உயர்வோ அதேபோல் மற்றவர்கட்கும் அவரவர் தாய், தந்தை, மொழி, இனம், மதம், நாடு உயர்ந்ததுதான் என்னும் உண்மையை உணர்ந்து கொள்.
இறுதியாக, நீ எவ்வளவு அன்பை மற்றவர் மேல் செலுத்துகிறாயோ அதே அளவு அன்பு உனக்குப் பிறரிடமிருந்து கிடைக்கும் என்பதில் உறுதியாக இரு.

இக்கருத்துக்களை உள்ளடிக்கித்தான் நம் முன்னோர், கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே என்றனர். ஒவ்வொருவரும் அவரவர் கடமையைச் செய்தால், அன்பை அனைவர் மீதும் செலுத்தினால் அதன் பலனை எல்லோரும் அடைவர் என்பது தெள்ளிடை நீர் போல் விளங்கும்.

முனைவர் ப. இரத்தனசாமி
வான்கூவர்.

*இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. திருச்செல்வம் திருமகன்*

1893 செப். 11 – வரவேற்புக்கு மறுமொழி
1893 செப். 15 – நாம் ஏன் ஒத்துப் போவதில்லை?
1893 செப். 19 – இந்து சமயம்
1893 செப். 20 – சமயம் இந்தியாவின் அவசரத் தேவையன்று
1893 செப். 26 – புத்த சமயம் இந்து சமயத்தின் நிறைவு
1893 செப். 27 – நிறைவு நாள் உரை

## வரவேற்புக்கு மறுமொழி

*(1893 செப்டம்பர் 11ஆம் நாள் சிகாகோ நகரத்தில் கூடிய அனைத்துலகச் சமயப் பெருமன்றத்தில் நிகழ்த்திய உரை)*



அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே ! சகோதரர்களே!

இன்பமும் இதமும் கனிந்த உங்கள் வரவேற்புக்கு மறுமொழி கூற, இப்பொழுது உங்கள் முன் நிற்கிறேன். என் இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதனை வெளியிட வார்த்தைகள் இல்லை. உலகத்தின் மிகப் பழமை வாய்ந்த துறவியர் பரம்பரையின் பெயரால் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அனைத்துச் சமயங்களின் அன்னையின் பெயரால் நன்றி கூறுகிறேன். பல்வேறு இனங்களையும் பிரிவுகளையும் சார்ந்த கோடிக்கணக்கான இந்துப் பெருமக்கள் பெயரால் நன்றி கூறுகிறேன்.

இம்மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களில் சிலர் கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'வேற்றுச் சமய நெறிகளை வெறுக்காத பண்பினைப் பல நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து வந்துள்ள இவர்களைத்தான் சாரும்' என்று உங்களுக்குக் கூறினார்கள். அவர்களுக்கும் என் நன்றி. பிற சமயக் கொள்கைகளை வெறுக்காது மதித்தல், அவற்றை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்துக்குப் புகட்டிய சமயத்துக்குரியவன் என்பது குறித்து நான் பெருமை அடைகிறேன். எதையும் வெறுக்காது மதிக்க வேண்டும் என்கிற கொள்கையை நாங்கள் நம்புவதோடு, எல்லாச் சமயங்களும் உண்மையானவையே என்று ஒப்புக் கொள்கிறோம்.

உலகிலுள்ள அனைத்து நாடுகளாலும் அனைத்துச் சமயங்களாலும் கொடுமைப்படுத்தப் பட்டவர்களுக்கும், நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டவர்களுக்கும் புகலிடமளித்த நாட்டைச் சேர்ந்தவன் என்பதில் பெருமைப்படுகிறேன். உரோமானியரின் கொடுமையால், தங்கள் புனிதத் திருக்கோயில் சிதைந்து சீரழிந்து அதே வருடமே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் தஞ்சமடைந்த அந்தக் கலப்பற்ற இஸ்ரேல் மரபினர்களில் எஞ்சி நின்றவர்களை இதயமாரத் தழுவிக் கொண்டவர்கள் நாங்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். சிறந்த சொராஸ்திரிய சமயத்தினரில் எஞ்சியிருந்தோருக்கு அடைக்கலமளித்து, இன்னும் பேணிக்காத்து வருகிற சமயத்துக்கு உரியவன் என்று பெருமை கொள்கிறேன்.

என் அருமைச் சகோதரர்களே ! எனது பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப்பயின்று வருவதும், கோடிக்கணக்கான மக்களால் நாள்தோறும் இன்றும் தொடர்ந்து ஓதப்பட்டு வருவதுமான கீதத்தின் ஒரு சில வரிகளை இங்கு, உங்கள் முன் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மை யாலே
துங்குமிகு நெறிபலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றி னாலும்
அங்குஅவைதாம் எம்பெரும ! ஈற்றில் உனை
அடைகின்ற ஆறே யன்றோ !

இதுவரை நடந்துள்ள மாநாடுகளில், மிக மிகச் சிறந்ததாகக் கருதக்கூடிய இப்பேரவை, கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள பின்வரும் அற்புதமான ஓர் உண்மையை

இந்தப் பக்கத்தின் தாளாளர் - திரு. செல்லத்துரை விக்னராஜா

உலகத்துக்குப் பிரகடனம் செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். "யார் எவ்வழியைப் பின்பற்றி என்னையடைய முயன்றாலும், நான் அவர்களை அடைவேன். பலரும் பல வழிகளில் முயல்கிறார்கள், எல்லா வழிகளும் இறுதியில் என்னையே அடைகின்றன."

அளவுக்கு மீறிய மதப்பற்று, மூடபக்தி இவற்றிலிருந்து தோன்றிய மதவெறி, இவை இந்த அழகிய உலகை நெடுநாளாக இறுகப் பற்றியுள்ளன; வன்முறையை நிரப்பியுள்ளன; அடுத்தடுத்து உலகை உதிரப் பெருக்கில் மூழ்கடித்து நாகரித்தை அழித்து, எத்தனையோ சமுதாயங்களை நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டன. அந்தப் பயங்கரப் பைசாசக் கொடூரச் செயல்கள் தோன்றாதிருப்பின் மனித சமுதாயம் இன்றிருப்பதை விடப் பன்மடங்கு உயர்நிலை எய்திருக்கும் !

ஆனால், அவற்றுக்கு அழிவு காலம் நெருங்கி விட்டது. இன்று காலையில் இந்தப் பேரவையின் தொடக்கத்தைக் குறிப்பிட ஒலித்த மங்கல மணி, எல்லா மத வெறிகளுக்கும், வாளாலும் எழுதுகோலாலும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும், ஒரே குறிக்கோளை அடையப் பல்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களிடையே நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாகட்டும் என்று நான் ஆர்வமுடன் வேண்டுகிறேன்.

## நாம் ஏன் ஒத்துப்போவதில்லை?
*(1893 செப்டெம்பர் 15ஆம் நாள்)*

ஒரு சிறுகதை சொல்லப் போகிறேன். "நாம் ஒருவரையொருவர் வசை பாடுவதை நிறுத்த வேண்டும்" என்று இப்பொழுது பேசி முடித்த நாவன்மை படைத்த பேச்சாளர் கூறியதைக் கேட்டீர்கள். நமக்குள் இவ்வளவு மாறுபாடு இருப்பதைப் பற்றி அவர் வருத்தப்பட்டார். இந்த மாறுபாடுகளுக்குக் காரணம் என்ன என்பதை விளக்க, ஒரு கதை சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன்.

